பக்கங்கள் எட்டு:
விலை ரூபா 5-00
Registered as a News Paper in SriLanka

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

# வலம்புரி
# VALAMPURI

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1980)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 31 திங்கட்கிழமை 14-05-2001 தொலைபேசி: 3378 ஒலி: 146

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

### தமிழக சட்டசபைத் தேர்தல்

# அ.இ.அ.தி.மு.க. அமோக வெற்றி

# கலைஞரின் தி.மு.க. மண்கவ்வியது

## முதலமைச்சராக ஜெயலலிதா பதவிஏற்பார்

(சென்னை)

**தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் செல்வி ஜெயலலிதா தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகக் கூட்டணி அமோக வெற்றியீட்டியுள்ளது.**

**மத்தியில்உள்ள தேசியஜனநாயகக் கூட்டணியின் பிரதானதோழமைக் கட்சியான திராவிட முன்னேற்றக்கழகக் கூட்டணி படுதோல்வி அடைந்தது.**

**தேர்தல் முடிவுகள் வெளியானதை அடுத்து செல்வி ஜெயலலிதாவின் வீட்டுக்கு முன்பாக அவரது ஆதரவாளர்கள் பெருமளவில்கூடி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தவண்ணம் உள்ளனர்.**

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தமிழக சட்ட சபைத்தேர்தலில், மத்திய அரசில் அங்கம்வகிக்கும் திராவிட முன்னேற்றக்கழக கூட்டணி, செல்வி ஜெயலலிதாவின் தலைமையிலான அ. இ. அ. தி-மு. க.கூட்டணி, வை. கோபாலசாமி தலைமையிலான ம. தி. மு. க. உட்பட பல கட்சிகள் போட்டியிட்டன.

அ. இ. அ. தி. மு. க கூட்டணியில் ஜி. கே. மூப்பனார் தலைமையிலான த. மா. க. வும்; டாக்டர் ராமதாஸ் தலைமையிலான பா. மா. க. வும், சோனியா தலைமையிலான காங்கிரஸ் கட்சியும் இடம் பெற்றிருந்தன.

செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ. இ. அ. தி. மு. க. 140 தொகுதிகளில் தனித்துப்போட்டியிட்டு 132 தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளது.

234 சட்டப் பேரவைத் தொகுதிகளைக் கொண்ட தமிழ் நாடுசட்ட சபையில் 118 தொகுதியில் வென்றால்

[8ஆம் பக்கம் பார்க்க]

## புரட்சித்தலைவரின் வழியில்

## யாழ். நீதவான் முன்னிலையில்
## 22 மீனவர்களும் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த சமயம் கடற்படையினரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட 22இந்திய மீனவர்களும் நேற்று யாழ் நீதவான் இ. த. விக்கினராஜா முன்னிலையில் அவரின் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

(8ஆம் பக்கம் பார்க்க)

### அரசுக்கெதிரான பிரேரணையை
## இ. தொ. காங்கிரஸ்
## முழுப்பலத்துடன் எதிர்க்கும்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசைக்கவிழ்க்கும் நோக்குடன் ஐக்கியதேசியக் கட்சியினால் கொண்டுவரப் படவுள்ள நம்பிக்கை இல்லா பிரேரணையை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனது முழுப்பலத்துடன் தோற்கடிக்குமென முன்னாள் இ. தொ. க எம்.பியும்,

(8ம் பக்கம் பார்க்க)

### சமாதானப்பேச்சிற்கு வசதியாக
## மூன்று மாத யுத்தநிறுத்தத்தை

வின் தலைமையிலான அ. இ. அ. தி. மு. க.கூட்டணி, வை. கோபாலசாமி தலைமையிலான ம. தி. மு. க. உட்பட பல கட்சிகள் போட்டியிட்டன.

லான காங்கிரஸ் கட்சியும் இடம் பெற்றிருந்தன.

செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ. இ. அ. தி. மு. க. 140 தொகுதிகளில் தனித்துப்போட்டியிட்டு 132 தொகுதியில் வென்றால்

[8ஆம் பக்கம் பார்க்க]

கட்சியினால் கொண்டுவரப் படவுள்ள நம்பிக்கை இல்லா

இ. தொ. க எம பியும்,

(8ம் பக்கம் பார்க்க)

## புரட்சித்தலைவரின் வழியில் ஈழத்தமிழருக்கு உதவுவோம்

### வெற்றிக்களிப்பில் ஜெயலலிதா

[சென்னை)

அடுத்த ஐந்துவருடங்களுக்கு தமிழ்நாட்டில்மக்கள் ஆட்சி மலரவேண்டுமென அனைத்திந்திய அண்ணாதிரா விட முன்னேற்றக்கழகத்தை ஆட்சியில் அமர்த்துவதற்கு தமிழக மக்கள் தமது முடிவை மிகவும் துல்லியமாகத் தெரி

[8ஆம் பக்கம் பார்க்க]

## தி.மு.க வில் போட்டியிட்ட முக்கிய மந்திரிகள்தோல்வி

(சென்னை)

தமிழக முன்னாள் முதல்வர்மு.கருணாநிதிஅமைச்சர்கள்க.அன்பழகன் ஆர் காடு விராச்சாமிசென்னைமாநகர மேயர் மு.க.ஸ்ராலின், சட்டப்பேரவைத் துணைத்தலைவர் இளம்பரிதி ஆகியோர் திமு.க.வில் வெற்றிபெற்ற முக்கியஸ்தர்களாவர்.

இதேவேளை தி.மு.க.சார்பில் போட்டியிட்ட சட்டபேரவைத்தலைவர் பி.ரி.ஆர் பழனிவேல்ராஜன் மற்றும் அமைச்சர்களான வீரபாண்டி ஆறுமுகம், ஆலடி அருணா, ரகுமண்ஹாண், கே.என்.நேரு,ஐ பெரியசாமி ஆகியோர் தோல்வியடைந்துள்ளனர். (வ)

### சமாதானப்பேச்சிற்கு வசதியாக

## மூன்று மாத யுத்தநிறுத்தத்தை அரசுமிகவிரைவில் அறிவிக்கும்?

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையில் யுத்த நிறுத்த சூழ்நிலையில்சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கு ஏதுவாக மூன்றுமாதகால யுத்தநிறுத்த அறிவிப் பொன்றை மிக விரைவில் அரசாங்கம்அறிவிக்குமென அரச உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடுவதில்லைஎன்ற நிலைப்பாட்டில் அரசுயுத்த நிறுத்தமொன்றை அறிவிக்கவுள்ளது.

இந்தயுத்தநிறுத்த அறிவிப்புத் தொடர்பாக தேசிய பாது காப்பு கவுன்சில், உறுப்பினர்களுடன் அரச உயரதிகாரிகள் கலந்துகொண்ட சந்திப்பொன்றிலேயே அரசு யுத்தநிறுத்தம செய்ய வேண்டியதன் அவசியம் வலியுறுத்திக் கூறப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

யுத்த நிறுத்தம் ஒன்றை அரசு மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை இராணுவபொலிஸ் உயர்அதி

(8ம பக்கம் பார்க்க)

## கலைஞர் இராஜினாமா

[சென்னை]

தமிழ்நாட்டு சட்ட சபைத் தேர்தலில் படு தோல்வி அடைந்த தி மு.க தலைவர் கலைஞர் மு. கருணா நிதி தனது இராஜினாமா கடிதத்தை நேற்று தமிழக ஆளுனர் செல்வி பாத்திமா பிபியிடம் சமர்ப்பித் துள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பி க்கு விடுதலைப்புலிகள் நிதி உதவி வழங்கியுள்ளனா

### ஜனாதிபதி குற்றச்சாட்டு

நாட்டில் குழப்பத்தைஉண்டுபண்ணுவதற்கென விடுதலைப்புலிகள்மக்கள்விடுதலை முன்னணிக்கு நிதிவழங்கியுள்ளது என்று ஜனாதிபதி குமாரதுங்க கடந்த புதன் கிழமை நடைபெற்ற பொ. ஜ ஐ மு நாடாளுமன்றக் குழுககூட்டத்தில் தெரிவித்து இதுபற்றி தமக்குப் புலனாய்வுத்தகவல் கிடைத்ததாகவும் ம வி மு உறுப்பினரொருவர் மட்டக்களபபில் புலிகளிடம் பயிற்சிபெற்றுள்ளாரெனவும் ஜனாதிபதி அங்கு தெரிவித்தார் இதேவேளை ஜே வி. பி. பிரச்சாரச்செயலாளர் விமல் வீரவன்ச இதனை முற்றாக மறுத்து. தனது கட்சிக்குள்ளே கட்டுப்பாட்டை பேணமுடியாதவர் இவ்வாறான கதைகள் கூறுவதில் என்ன அர்த்தம்இருக்கிறது: எனவும் வினாவினார். (ந

## நிலையான சமாதானத்தை அடைவதற்கு புலிகளின் தடைநீக்குவது அவசியம்

### நோர்வே தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் பேட்டி

[கொழும்பு]

இலங்கையின் இனப் பிரச்சினைவிவகாரத்தில் ஏற்பாட்டாளர் பணியை பொறுப்பேற்க முன்னராக பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் ஏற்கனவே நோர்வேயில் விடுதலைப் புலிகளின் எந்தவொரு நடவடிக்கைகளிலும் நான்பங்குபற்றியது இல்லை எனநோர்வேயின் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுடன் ஏற்கனவே தொடர்புகள் இருந்ததாக தெரிவிக்கப்படும்குற்றச்சாட்டுக்களைநிராகரித்துள்ள அவர் அப்படியானால், இலங்கைஅரசு,ஐக்கியதேசியக்கட்சி நோர்வே வெளி விவகார அமைச்சு என்பன ஏற்பாட்டாளர் என்ற இந்தப்பொறுப்பை எப்படி என்னிடம் ஒப்படைத்திருக்கமுடியும். என்றும் வினா எழுப்பியுள்ளார்.

நோர்வே அரசு கேட்டுக்கொண்டதன் பிரகாரமே ஏற்பாட்டாளராக பணியாற்றுகிறேன்.

அதன் பின்பு தான் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு

(8ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

ஐயாத்துரை நிதிபாலன் என்பவருடைய விசேட அ. அட்டை (இல. 0907023037) தேசிய அடையாள அட்டை இல.(790774990 V) என்பன மருதனார்மடத்திற்கும் இருபாலைக்கும் இடையில் 12.05.2001 அன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மில்லேன் மல்லாகம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.

(கி-1987)

## வருடாந்த மஹோற்சவம்

[யாழ்ப்பாணம்]

வில்லூன்றி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம்நேற்று ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து ஒன்பது நாட்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்த திருவிழாவும் நடைபெறவுள்ளன.

[செ]

## தொலைக்காட்சி பெட்டி அன்பளிப்பு

(கொழும்பு)

திருகோணமலை அன்னை சாரதா மகளிர் இல்லத்தின் பாவனைக்காக தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

(செ-7)

## தென்மராட்சி மக்கள் கவலை

(கோப்பாய்)

தென்மராட்சிப் பகுதியிலிருந்து பெருமளவு வீட்டுத் தளபாடங்கள் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவது கடந்த சில நாட்களாக அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதிமக்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

[செ-79]

## விதவைகளுக்குசுயதொழில் ஊக்குவிப்புக் கடன்

(ஊர்காவற்றுறை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சாவற் கட்டுக் கிராமத்தில் குடும்பத் தலைவர்களை இழந்த ஐம்பத்தொரு குடும்பங்களுக்கு யு. என். எச். சி ஆர். நிறுவனத்தினால் சுய தொழில் ஊக்குவிப்புக்கடன் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

சாவல் கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாகவே இச் சுய தொழில் ஊக்குவிப்புக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

(செ-75)

## நெடுந்தீவு பகுதியில் செங்கண்மாரிநோய்

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவுப் பகுதியில் செங்கண்மாரி நோய் வெகு வேகமாகப் பரவி வருகின்றது.

இந்நோயினால் அதிகம் பாடசாலை மாணவர்களே பீடிக்கப்பட்டுள்ளனர்.

இந்நோய் பரவுவதனை தடுக்கும் வகையிலான கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் என்பவற்றை ஒழுங்கு செய்து மக்களுக்கு ஆலோசனை வழங்குவதில் இப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். கே. அருந்தவராஜா ஈடுபட்டு வருகின்றார்.

உணவு, நீர் ஆகியவற்றில் சுத்தம் பேணுவதுடன், தனிநபர் சுத்தம் பேணப்படுவதும் இந்நோய் பரவாது தடுப்பதற்கு மிகவும் அவசியமானது எனவும் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

(செ-75)

## விவசாய, விஞ்ஞான ஆசிரியர்களுக்கு சேவைக்காலபயிற்சி வகுப்பு

(மந்துவில்)

தென்மராட்சி கல்விவலயத்தைச் சேர்ந்த விவசாய, விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக் கால பயிற்சி வகுப்பு எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் 25ஆம்திகதிவரை, யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பாட அலகுகளும் அத்துறைசார்ந்தவர்களால் கற்பிக்கப்படவுள்ளன.

இப் பயிற்சி வகுப்பில் விவசாய விஞ்ஞானம் கற்பிற்கும் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

(செ-39)

## மீசாலையில்குடியேறிய மக்களின் தேவைகள் 52வது படையணித் தளபதியை ஈ. பி. டி. பி யினர் சந்தித்தனர்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், கூட்டுறவுச் சங்கம். மற்றும் தபாற் கந்தோர் ஆகியவற்றை உடனடியாக இயங்க வைப்பதற்கு ஈ. பி. டி. பியினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மீசாலைப் பகுதியில் மீளக் குடியேறியமக்கள் தமது அடிப்படை வசதிகள் கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு கோரியதையடுத்தே ஈ. பி. டி. பியினர் மேற்படி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இவற்றை இயங்கவைப்பது சம்மந்தமாக 52வது படையணியின் தளபதி பிரிகேடியர் லெதுங்காவை வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் வலி மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோக நாதன் மற்றும் தென்மராட்சி ஈ.பி.டி.பி அமைப்பாளர் சாள்ஸ் ஆகியோர் சந்தித்துகலந்துரையாடியுள்ளனர்.

(இ)

## நியமனம் வழங்கப்படவில்லை

[ஊர்காவற்றுறை]

யாழ்மாவட்டத்தில் இரண்டாவது தடவையாக நியமிக்கப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களுக்கான நிரந்தர நியமனம் இதுவரைவழங்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது

கடந்த வருடம் புரட்டாதி மாதம் இவர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்: எட்டு மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாததுஇங்கு குறிப்பிடத்தக்கது.

(இ-75)

## மூடப்பட்ட நிலையில் 571 பாடசாலைகள்

[கொழும்பு]

தென்பகுதியில் 63 பாடசாலைகள் மூடப் பட்டுள்ளதாக தென்மாகாண முதலமைச்சர் மகிந்தயாப்பா அபய ரத்தின கூறியுள்ளார்.

இந்தப் பாடசாலைகளில் கல்விகற்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைவடைந்ததை யடுத்தே மூடப் பட்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை நாடு தழுவிய ரீதியில் 571 பாட சாலைகள் மூடப்பட்டநிலையில் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(வ-5)

## காரைநகர் பிரதேசத்தில் போரூட் ஆதரவுடன் சுகாதாரக் கல்வி

போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் காரைநகரில் சுகாதாரக் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தினை காரைநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நடத்தி வருகின்றார்.

சிரங்கு, டெங்குக்காய்ச்சல், புழுவியாதி மற்றும் போசாக்கு சம்பந்தமான கருத்தரங்குகள், வீடியோப் படக்காட்சி, கலந்துரையாடல்கள் என்பவற்றின் மூலம் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன்,

இதுசம்பந்தமான துண்டுப் பிரசுரங்களும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படவிருக்கின்றன.

## கடற்றொழில் ஆய்வுக்கு அமைச்சு நிதிஉதவி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் யாழ்ப்பாணம் வடமராட்சி தென்மராட்சி மற்றும் தீவகம் ஆகியபிரதேச கடற்பகுதிகளில் கடற்றொழில் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு நிதி வழங்க முன்வந்துள்ளது.

யாழ்மாவட்டமீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகள் சங்கத்தினர் மேற்படிஆய்வில் ஈடுபடவுள்ளனர்;

இவ்ஆய்வுநடவடிக்கை பற்றி மேற்படிசங்கத்தினர் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவிடம் எடுத்துக்கூறியிருந்தனர். இதனையடுத்தே அமைச்சர் ஆய்வுக்குநிதிவழங்கஇணக்கம் தெரிவித்துள்ளார்.

(இ)

## நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் நடமாடும் சேவை எதிர்வரும்21ந்திகதி காலை9.00மணிமுதல புலோலியிலுள்ள பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலகத்திற்கு அருகில் நடைபெறும்

இந்தநடமாறும் சேவையில் கிளிநொச்சி அரசஅதிபர்இ.ஐயாத்துரை கலந்துகொள்கிறார்.

(இ)

## சிப்பாய் தற்கொலை

(கொழும்பு)

இலங்கை விமானப் படைத் தளபதி ஜெயலத்வீரக்கொடியின் வீட்டில், காவல்பணியில் ஈடுபட்டிருந்த. படைச் சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

இச்சம்பவம் கொழும்பில் அதிஉயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள தளபதி ஜெயலத் வீரக்கொடியின் வீட்டில் நேற்றுக் காலை 1.30மணியளவில் இடம்பெற்றது.

ஜே. ரி. நிமால் என்ற படைச்சிப்பாயே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவர்.

(இ)

## சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்குப் பிரதேச சபையின்ஏற்பாட்டில், கோப்பாய், அரசினர் வைத்தியசாலை மற்றும் கோப்பாய் கந்தசுவாமி கோவில் ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் அபிவிருத்தித் தொண்டர்கள், சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள், கிராம உத்தியோகஸ்தர்கள் இணைந்து சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

இச் சிரமதானப்பணி வலிகிழக்குப் பிரதேச சபை உபதலைவர்யு. எல். ஏ. ரவியின் தலைமையில் நடைபெற்றது.

(இ)

## யாழ் மேயர் பிறேஸில் பயணம்

(கொழும்பு)

யாழ் மாநகரசபை மேயர் சட்டத்தரணி என். ரவிராஜ் பிறேஸிலில் நடைபெறவுள்ள நிகழ்ச்சி ஒன்றில் பங்குபற்றுவதற்காகவே நேற்று பிறேஸில் பயணமானதாகத்தெரிவிக்கப்படுகிறது.

பிரேஸிலில் நடைபெறவுள்ள மேயருக்கான இம் மாநாட்டில்; நாட்டில் உள்ள சகல மேயர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(வ)

## யாழ். குடாநாட்டின் மின்பாவனையாளர்களுக்கான அறிவித்தல்

பாவனையாளருக்கு வழங்கப்படும் மின்பட்டியல்களை 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும் என்பது இலங்கை மின்சார சபையின் அறிவுறுத்தலாகும் ஒவ்வொரு பட்டியலின் பின்புறத்திலும் இது காணப்படுகின்றது.

ஆனால் பிரதேசத்தில் உள்ள அசாதாரண சூழ்நிலையால் பலர் இந்த அறிவுறுத்தலைக் கண்டுகொள்ளாது மின்பட்டியல்களைச் செலுத்தாது விட்டதனால் பல ஆயிரம் ரூபா நிலுவையாகக் காணப்படுகிறது. இதனால் எமது ஸ்தாபனத்திற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே இனியும் காலந் தாழ்த்தாது இந்நிலுவைகளை முழுமையாகச் செலுத்தி மின் துண்டிப்பைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். 2001 வைகாசி 31ம் திகதிக்குப் பின்னர் உங்கள் கணக்குகள் யாவும் பரிசீலிக்கப்பட்டு இரு மாதங்களுக்கு மேல் நிலுவை இருப்பவர்களுடைய மின் விநியோகம் மறுஅறிவித்தல் எதுவுமின்றித் துண்டிக்கப்படும் என்பதை இத்தால் அறியத்தருகிறேன். அவ்வாறு துண்டிக்கப்பட்டால் அல்லது துண்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், நிலுவையின் 10 வீதம் தண்டப்பணமாகவும், ரூபா 500/- துண்டிப்பு நடவடிக்கைக் கட்டணமாகவும் செலுத்த வேண்டி ஏற்படும் என்பதனையும் சகல பாவனையாளருக்கும் அறியத்தருகிறேன்.

பட்டியல்களைச் செலுத்தி உங்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்கள் மற்றும் இழப்புகளைத் தவிர்த்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிரதேச மின் பொறியியலாளர்
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்''
இலங்கை மின்சார சபை.

(கி/1985)

## வானொலி அறிவிப்புக்கென கலைஞர்கள் தெரிவு

★==★=★=★=★=★=★==★

வானொலி அறிவிப்பு செய்வதற்கும் வானொலி நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கும் பின்வரும் தராதரங்களைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

1) **வயதெல்லை :** 18க்கும் 35க்கும் இடைப்பட்டவர்கள்.

2) **குறைந்தபட்ச கல்வித்தரம்:** க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் 6 பாடங்களில் ஒரே தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அவற்றில் தமிழ்மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அறிவிப்புத்துறை, பத்திரிகைத்துறை, எழுத்துத்துறை, நாடகத்துறை போன்ற துறைகளில் விசேட அனுபவம் கொண்ட விண்ணப்பதாரர்களைப் பொறுத்தவரை கல்வித்தராதரங்கள் தளர்த்தப்படுவது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 18-5-2001**

தகுதியுடையவர்கள் சுய விபரங்களைக் கொண்ட விண்ணப்பங்களை,

**''பணிப்பாளர், ஊடகத்துறை, வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு, மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சின் யாழ். செயலகம், 273, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்''** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(கி-1989)

# இன்று மக்களின் எதிர்பார்ப்பு சமாதானம்

# எமக்காக அலைகிறார் எரிக்சோல்ஹெய்ம்

இலங்கையில் வாழ்கின்ற மக்களிடையே குறிப்பாக தமிழ் மக்களிடையே ஏகோபித்த வினா ஒன்று கடந்தபல மாதங்களாக தலைநிமிர்த்தி நிற்கின்றது.

பேச்சுவார்த்தை நடக்குமா? அதனால் சமாதானம் மலருமா? எமது வாழ்வுசிறக்குமா? உறவுகளோடு ஒன்றுபட்டு தாய் நிலத்தில் மீண்டும் சந்தோசத்தோடு வாழ்வோமா என்ற சங்கிலித் தொடர் வினா அது.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் வன்னி சென்று விடுதலைப் புலிகள் தலைவர்பிரபாகரனுடன் இப்பிரச்சினைகுறித்து பேச்சு என்ற அதிரடியான செய்தி மூலம் கடந்த 2000 ஆம் ஆண்டின் இறுதிக் கூற்றில் உருவாக்கப்பட்ட சமாதானம்பற்றியதானஎண்ணப்பாடு, எதிர்பார்ப்பு இன்றுவரை நம்பிக்கையையும் அவநம்பிக்கையையும் மாற்றி மாற்றிமக்கள்மனதில் விதைத்தவாறுகாலம்வீணே கரைந்து செல்கிறது.

### சமாதான தேவதை

மக்கள் மனங்களில் சமாதானத் தேவதையாக இன்றைக்கும் குடி கொண்டிருக்கின்ற இருதரப்பு புரிந்துணர்வு ஏற்பாட்டாளர் நோர்வேக்கும், கொழும்புக்கும், வன்னிக்கும் இலண்டனுக்குமாக தன் முயற்சியில் சற்றும் மனம் தளராது மாறி மாறி அலைந்து கொண்டிருக்கிறார்.

யார் எவ்வாறு அலைந்தென்ன தலைகீழாய் நின்றாலும் சமாதானம் பற்றிச் சிந்திக்க வேண்டியவர்கள், செயற்பட வேண்டியவர்கள் போருக்கச் செயற்பாடுகளிலேயே முனைப்புப்பெற்றுநிற்கிறார்கள் என்பதை நடைமுறை நிகழ்வுகள் தெட்டத் தெளிவாக சுட்டிநிற்கின்றன.

### போராட்டம்

'நமக்குத் தொழில்போராடுதல் நாம் போராடப் பிறந்தவர்கள்' எனகடந்த வருடம் லண்டனில் இடம் பெற்ற மாவீரர்தின உரையில்புலிகள் இயக்கத்தின் ஒரேயொரு அரசியல் ஆலோசகர் எனக் கருதப்படுகின்றகலாநிதி அன்ரன் பாலசிங்கம் கொள்கை விளக்கப் பிரகடனம் செய்திருக்கின்றார்.

அண்மையில் இடம் பெற்ற 'அக்கினிச்சுவாலை -1' படை நடவடிக்கையில் தீரமுடன் போராடி எதிர்த்தரப்பை புறமுது கோட.ச்செய்த படையணிகளின் தளபதிகளுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தனிப்பெரும் தலைவர் பிரபாகரன் மண்ணையும் மக்களையும் காக்க அவசரமாக செயற்படவேண்டிய தேவைகுறித்து வலியுறுத்திக் கூறியுள்ளார்.

தவிர அவர்கள் வசம் இருக்கின்ற அதி நவீன ஆயுதங்கள் பற்றிய விபரங்களை அரச தரப்புபுலனாய்வுப்பிரிவினரே அடிக்கடி கூறி வருகின்றனர்.

புலிகள் தரப்பின் நிலைப்பாடுஎன்னவென்பதைவிளங்க வைக்க இதைவிட வேறுசான்றுகள் தேவையில்லை.

### நாடுகளின் உதவி

மறுபுறத்தில் பார்த்தால், ஆயுதக் கொள்வனவென்றும் அது குறித்த பேச்சென்றும் அரசக் கட்டில் வீற்றிருப்போர் நாடு மாறி நாடு யாடி பாய்ந்து யாகித்து வருகின்றனர்.

**உமா**

செக் குடியரசு, இஸ்ரேல், சீனா, பாகிஸ்தான், இந்திய நாடுகளின் பேரழிவு தரவல்லதும் நவீனத்துவம் மிக்கதுமான ஆயுதங்கள், படைக்கலங்கள் போர் முனைகளையும், ஆயுத, களஞ்சிய சாலைகளையும் நிரப்பும் தகவல்களை செய்தி ஊடகங்கள் சுட்டி நிற்கின்றன.

### சமாதானம்

இனவாதம் பேசி, அதனைத் தூண்டி விடுகின்ற சிஹல உறுமய போன்ற சிங்களக் கட்சிகளோ, போரைத் தொடங்கு- தமிழ்த் - தேசியம் பேசுபவர்களை அழித் தொழி- அவர்கள் நிலத்தை அபகரி' என்ற ரீதியில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் அறை கூவல்களை விடுத்து நிற்கின்றன.

இந்த நிலையில், நாம் எண்ணி ஏம்பலிக்கின்ற சமாதானம் பிறக்குமா? அதற்கு வழி சமைக்கவல்ல சமாதானப் பேச்சுக்கள் இடம் பெறுமா?

சமாதானம் தேவைப்படுவது பொது மக்களுக்கு, கடந்த 18 வருடங்களாக தொடர்ந்து கொண்டிருக்கின்ற இனப் போரினால் அலைந்து உலைந்து ஆற்றாது அழுது திரிகின்றதும் அவர்கள் தான்.

### விட்டுக் கொடுப்பு

இந்த உண்மை நிலைப்பாட்டை எனைக்கு இரு தரப்பும் உணர்ந்து, பரஸ்பரம் விட்டுக் கொடுப்புகளுக்கு முன் வருகிறார்களோ அன்றைக்குத்தான் இந்த நாட்டில் சமாதானம் பிறக்கும். எல்லோரும் இந் நாட்டு மன்னர் என்ற வாசகம் ஒலிக்கும்.

இறுதியாகவும் உறுதியாகவும் ஒன்றே ஒன்றை மட்டும் நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

கோடிகோடியாகக்கொட்டிக் கொடுத்து ஆயுதக் கொள்வனவில் ஈடுபடுவது சமாதானம் பேசவல்ல.

பேச்சுக்கள் இடம் பெறலாம், வெறும் உதட்டளவில் மாத்திரமே. உண்மையில் நிகழப்போவது பெரும் போரும் அதனால் உயிர் உடைமை அழிவுகளும் மாத்திரமே.

## அன்னையர் தினம்

அன்பின் முழு வடிவமே அன்னை. உலகமாதாவாக விளங்கும் எம்பெருமாட்டியை நாம் அன்னை பராசக்தி என்றே அழைக்கின்றோம். தாயிற்சிறந்ததொரு கோயிலுமில்லை. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற ஆன்றோர் கூற்றும் அன்னையைப் போற்றுகின்றன

பத்துத்திங்கள் பொறுமை காத்து முத்தாகஒரு குழந்தையைப் பெற்றெடுப்பவள் அன்னை, அக்குழந்தையை கைகளில் ஏந்திய மாத்திரத்தில் அவள் அடையும் ஆனந்தத்திற்கோ அளவில்லை இவ்வாறு ஆசையோடு பெற்றெடுக்கும் அன்புக் குழந்தையை, அது பிறந்த நேரம் தொடக்கம் அதனைக் கண்ணாகப் போற்றிவளர்ப்பவளும் அவளே. எனவே, அன்னையின் அன்புக்கு ஈடாக எதையும் கொள்ளமுடியாது. இத்தினத்தில் அத்தாயைப் போற்றுவோம்.

**வசந்தா மணாளன்**

## துன்பத்தின் மத்தியில் இடம் பெயர்ந்தோர்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி லூர்து மாதா தேவலயப் பகுதி நலன் புரிநிலையத்தில் தங்கியிக்குஇடம் பெயர்ந்த குடும்பங்கள போதிய உதவிகள், வசதிகள் அற்ற நிலையில்துன்பநிலையில் வாழ்ந்து வருகின்றமையைக் காணக் கூடியதாகவுள்ளது (செ-43)

## இரண்டு வருடங்கள் சிறை வைக்கப்பட்ட பெண் விடுவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்ற சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த பெண்ணை விடுதலை செய்யுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கே.கே எஸ் வீதியைச் சேர்ந்த குமாரவேல் லக்ஷுமி என்ற பெண்ணே 1999 ம் ஆண்டு நவம்பர் 25 ஆம் திகதி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர் அவார்.

இந்த பெண் யாழ். இராணுவ முகாம் அதிகாரி ஒருவரினால் கைது செய்யப்பட்டு ஏழுநாட்கள் முகாமில் தங்க வைக்கப்பட்டு பின்னர் காங்கேசன் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளை மூங்கில் தடியினால் தாக்கப்பட்டதாக மனுவில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த மனுத்தாக்கலை விசாரணை செய்த நீதியரசர் கலாநிதி அமரசிங்க வட்டுக்கொடபிட்டிய மற்றும் எச். எஸ். யாப்பா ஆகியோர் இவரது கைது சட்டவிரோதமானதென்றும் அடிப்படை மனித உரிமை மீறல் என்றும் தீர்ப்பளித்துஇவரைவிடுதலை செய்யுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளனர். (செ-5)

## காவலூர் பிர. சபைக்குட்பட்ட பகுதியில் ஐந்து லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேசசபையின் கீழ்உள்ள பகுதியில் பிரமாண அடிப்படையில் ஐந்துலட்சம் ரூபா செலவில் நான்கு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஊர்காவற்றுறை நாரந்தனை பொதுச்சந்தை ஒருலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாவிலும், நாரந்தனை புதுக்குடியிருப்பு வீதி அமைபபிற்கு ஒருலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாவும், காரைநகர் சாம்பலோடை உவர்நீர்த் தடுப்பு அணை அமைப்பு ஒருலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவிலும் காரைநகர் விக்காவில் சலவைக்குளம் திருத்தம் ஒருலட்சம் ரூபாவிலும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இவ் வேலைத்திட்டங்களின் ஆரம்பக்கட்ட வேலைகள் தொடங்கி, நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-75)

## வடமராட்சி கிழக்கில் வசதிகளற்ற நிலையில் இடம் பெயர்ந்தோர்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு, குடத்தனை மணற்காட்டுப் பகுதிகளில் இடம்பெயர்ந்து வசித்து வரும் மக்களுக்கு முகாம் வசதிகள் செய்து தரப்படவில்லையென அம்மக்களால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாமுனை, செம்பியன்பற்று, நாகர்கோவில் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களே மேற்படி வசதிகள் ஏதுமற்ற நிலையில் கஷ்டப்படுவதாக கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-43)

## மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர், யாழ்ப்பாண கோட்ட பாடசாலைகளிற்கு இடையேயான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு தொடங்கி தொடர்ந்துமூன்று தினங்கள் நடைபெறும். (உ-10)

## வலைப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே அண்மையில் நடை பெற்ற வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் முடிவுகள வருமாறு.

**15 வயதுப் பிரிவு பெண்கள்**

1 ஆம் இடம் இராமநாதன கல்லூரி.

2 ஆம் இடம் கொக்குவில் இந்துக் கல்லூரி.

3 ஆம் இடம்பருத்தித்துறை மெதடிஸ் கல்லூரி.

**17 வயதுப் பிரிவு பெண்கள்**

1 ஆம இடம சண்டிலிபபாய் இந்துக் கல்லூரி.

2 ஆம் இடம யூனியன் கல்லூரி.

3 ஆம் இடம் வட. இந்து மகளிர் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு பெண்கள்**

1 ஆம இடம யூனியன கல்லூரி

2 ஆம்இடம் சண்டிலிபபாய் இந்துக கல்லூரி.

3 ஆம் இடம மெதடிஸ் கல்லூரி பருத்தித்துறை.

(செ-10)

## காரைநகர் வைத்தியசாலைக்கு கடற்படையினரால் மின்சாரம் விநியோகம்

(ஊர்காவற்றுறை)

காரைநகர் வைத்தியசாலைக்குஇரவுவேளையில்கடற்படையினரால்மின்சாரம் வழங்கப்படுகின்றது.

வெசாக் தினத்திலிருந்து தினமும் இரவுவேளை கடற்படையினரால் மின்சாரம் விநியோகிக்கப்படுகின்றது.

கடற்படையினர் தமது சொந்த மின்பிறப்பாக்கிமூலம் மின்சாரத்தை விநியோகிப்பதுடன், இவ்வைத்தியசாலைக்கு வர்ணம் தீட்டும் நடவடிக்கையிலும்ஈடுபட்டுள்ளனர். (செ-75)

## 2 வதுதடவை கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி, இப்பகுதி வெகுஜன அமைப்புக்களால் இரண்டாவதுதடவையாகவும், மின்சக்தி எரிபொருட் றுறை அமைச்சிற்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [செ-43]

## துன்னாலை மேற்கில் திருட்டுக்கள் அதிகரிப்பு

(மந்துவில்)

துன்னாலை மேற்கு பகுதியில் சமீப காலமாக திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துள்ளமையால் அப்பகுதி மக்கள் பீதியில் உறைந்துபோயுள்ளனர்.

இரவுவேளைகளில் மக்கள் ஆழ்ந்த உறக்கத்திலிருக்கின்ற சமயம் வீடுகளுக்குள நுழையும்திருட்டுக் கும்பல் பெறுமதி மிக்க பொருட்கள், பணம், நகைகள் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுக் கும்பலில் வருகின்றவர்கள கத்தி, வாள் என்பவற்றைக் காட்டி வீட்டினரைப் பயமுறுத்திவிட்டே திருட்டுக்களில ஈடுபடுகின்றனர்.

இதனால் பொதுமக்கள் நித்திரை விழித்து தங்கள் உடைமைகளை பாதுகாத்துக் கொளகின்றனர் [செ-39

## செய்தித் துளிகள்

### மணிக் கோபுரம் அமைப்பு

(கல்வயல்)

உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் ஆலய வாயிலின் வலது புறத்தில் மிக உயர்ந்த மணிக்கோபுரம் அமைக்கப் பட்டுள்ளது.

மிக விரைவில் மணியேற்றும் வைபவம் நடைபெறவுள்ளதாக ஆலயத் திருப்பணிச் சபையினர் தெரிவிக்கின்றனர். (உ-111)

### கட்டாக் காலிகளால் எள்ளு நாசம்

(மானிப்பாய்)

நவாலி ஆனைக்கோட்டை கூழுண்டாய் பகுதி வயல்களில பயிரிடப்பட்ட எள்ளுப் பயிர்கள் கட்டாக்காலி ஆடு, மாடுகளால் அழிக்கப்பட்டதால் விவசாயிகளுக்கு பெருமளவில் நட்டம் ஏற்பட்டுள்ளதாக கவலை வெளியிட்டுள்ளனர். (உ-120)

### நூலகவாரம் அனுஷ்டிப்பு

(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவில் வருடந்தோறும் நடைபெறும் நூலகவார நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர் வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. (செ-79

### புலமைப் பரிசில்

(கல்வயல்)

உயர்கல்வி, தகவல் தொழில் நுட்ப அபிவிருத்தி அமைச்சால் பொது நலவமைப்பு பட்டப் பின் படிப்பு புலமைப் பரிசில்கள்- நியூ சிலாந்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பில் மேற்பிரிவில பட்டம் பெற்ற பட்டதாரிகள் எவரும் விண்ணப்பிக்கலாம் வயது எல்லை கிடையாது.

விண்ணப்ப முடிவு ஜூன் 15 ஆம் திகதியாகும்.

விண்ணப்பபடிவத்திற்கும் மேலதிக விபரங்களுக்கும் இலக்கம் 1183 கொண்ட 4 ஆம் திகதி அரசவர்த்தமானியைப் பார்வையிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ-111)

### வணிக ஜோதி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வர்த்தக மாணவர் மன்றத்தினால் வெளியிடப்படும் 19-வது வணிக ஜோதி மலர் வெளியீட்டு விழா, நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு மேற்படி கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இ. கஜேந்திரன் தலைமையில நடைபெறும் இந் நிகழ்விற்கு, யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் கே. தேவராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (செ)

### விண்ணப்பம் கோரல்

(கல்வயல்)

அரசாங்க உள்நாட்டலுவல்கள், நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சில் கணனி தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (உ-111)

### யானைக் கால் தடுப்புமருந்து

[கொழும்பு]

இலங்கையில் யானைக்கால் நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் எதிர் வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் நோய்த் தடுப்பு மருந்து வழங்கல் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இத் திட்டத்தை சுகாதார அமைச்சு, யானைக்கால் நோய் ஒழிப்பு இயக்கம், கொழும்பு மாநகர சபை ஆகியவை கூட்டாகச் சேர்ந்து செயற்படுத்தவுள்ளன. (செ-3)

### விலை சரிவு

(கல்வயல்)

மருதனார்மடம் சந்தையில் மரக்கறிகளின் விலை சரிவடைந்து வருகிறது. (உ-111)

### அலங்கார உற்சவம்

(கல்வயல்)

பருத்தித்துறை பன்னைக் கட்டை விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இம்மாதம் 26 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் விநாயகருக்கு விசேட அபிஷேகம், பூஜைகள் நடைபெறவிருக்கின்றது. [உ-111]

### பாதீனியம் ஒழிப்பு

(கல்வயல்)

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் புதிதாக நியமிக்கப்பட்ட அபிவிருத்தித் தொண்டர்கள் போதனாசிரியை தலைமையில் மருதனார்மடம் சந்தை, பிரதேச சபை உடுவில் உப அலுவலகச் சுற்றாடல் பகுதியில அண்மையில் பாதீனிய விஷக்களைச் செடிகளை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். [உ-111]

### சிரமதானம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில்அபிவிருத்தித் தொண்டர்களாக நியமனம் பெற்றவர்கள், சண்டிலிப்பாய் பிரதேச செயலக வளவில் சிரமதான வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ-120)

### 1 ஆம் வருட பூர்த்தியும் கண்காட்சியும

(யாழ்ப்பாணம)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாவது ஆண்டுப பூர்த்துவிழாவும் கல்விக் கண்காட்சியும் நாளை மறுதினம் புதன் கிழமை மு. ப. 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு தேசியக் கல்வியியற் கல்லூரிகளின் பிரதம ஆணையாளர் நிகால் ஹேரத பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளுகின்றார். (செ)

### அ.அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

இல-23, இராசசிங்கம் வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச்சேர்ந்த மரியநாயகம் சாண்மரினோஎன்பவருடைய தேசிய அடையாள அட்டை விசேட அடையாள அட்டை என்பவை கண்டெடுக்கப் பட்டு, வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். (ஆ-ர்)

# லக்ஸ்மன்கதிர்காமரின் அறிக்கைக்கு தமிழ்க் கட்சிகள் பலத்த அதிருப்தி

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கான இணக்கம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் விடுத்த அறிக்கை குறித்து தமிழ்க் கட்சிகள் பலத்த அதிருப்தியைத் தெரிவித்துள்ளன.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் நோர்வே எடுத்துவரும் முயற்சியை குழப்புவதாகவே கதிர்காமரின் அறிக்கை அமைந்துள்ளது.

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே உறவு ஏற்பட்டுள்ளது எனக் கூறி தமிழ்க்கட்சிகளின் ஆதரவைப்பெற்று. பாராளுமன்றத்தில் அரசிற்கெதிராகக் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் இருந்து அரசு தப்புவதற்காகவே கதிர்காமர் மேற்படி உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டுள்ளார் எனவும் தமிழ்க்கட்சிகள் மேலும் குற்றம் சாட்டியுள்ளன. (செ-9)

## இராசி பலன்

14-5-2001
(சித்திரை 31, திங்கள்)
சப்தமி பி.இ 2.23 வரை
திருவோணம் ந.இ 12.33 வரை
இராகுகாலம் 7.23- 8.53
நல்லநேரம் 11.53- 1.23
அமிர்த சித்தம்.

**மேடம்**
அதிகாரம், உத்தியோக நன்மை, காரிய ஜெயம், சுப செய்தி.

**இடபம்**
புதிய திட்டம், வயிற்றுக் கோளாறு, மனப்பயம், பிரயாணம்.

**மிதுனம்**
வீண்பிரச்சினை, மனச்சஞ்சலம், முயற்சி தடங்கல், கடன் தொல்லை.

**கடகம்**
பிரயாணம், சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், போசன சுகம்.

**சிங்கம்**
சத்துரு ஜெயம், மன மகிழ்ச்சி, தொழில் விருத்தி, தேக சுகம்.

**கன்னி**
புத்திரரால் கவலை, மதிப்புக் குறைவு, காரியதாமதம், அதிகாரிகள் மனஸ்தாபம்.

**துலாம்**
உறவினர் மனஸ்தாபம், அற்பா உறவு, மனச்சஞ்சலம், காரிய தாமதம்.

**விருச்சிகம்**
அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, இனிய சம்பவம், தனவரவு.

**தனுசு**
வயாதி, முயற்சி மந்தம், பொருள் விரயம், மதிப்புக் குறைவு.

**மகரம்**
சயன சுகம், காரியசித்தி, செல்வாக்கு, கற்பனை மிகுதி.

**கும்பம்**
பணச் செலவு, முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை, கௌரவம்.

**மீனம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, தனவரவு, மன மகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு.

(பழையநேரப்படிகணிப்பிடப் பட்டது)

வளவன்

## கழுத்தைநெரித்தபின்னரே கத்தியால் குத்தினர்

### பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிப்பு

நீர்கொழும்பில் கொலை செய்யப்பட்டமதகுரு கழுத்து நெரித்தே கொலை செய்யப் பட்டுள்ளார் என பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு 7 30 மணிக்குகொலை செய்யப்பட்ட மதகுரு பெர்னாண்டோ கொஸ்தாவின் பிரேத பரிசோதனையில் இருந்து மேலும் தெரியவருவதாவது.

உடலிலே 27 கத்திக்குத்துக் காயங்கள் காணப்பட்ட போதும் அவர் கழுத்து நெரிக்கப்பட்டதால் மூச்சுத் திணறியே இறந்திருக்கிறார் எனவும், இறந்த பின்னரே கத்தியால் காயப்படுத்தியிருக்கிறார்கள் என்றும் பிரேத பரிசோதனை நடத்திய நீர்கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் பொலிஸ் அதிகாரி குணசேன தெரிவித்துள்ளார்.

மதகுரு கொல்லப்பட்ட காரணத்தையும் சந்தேக நபரையும் கண்டுபிடிக்க விசேட பொலிஸ் குழு ஒன்று தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார் (செ-7)

## நுண்கலைப் பீடத்திற்கு புதிய விரிவுரை மண்டபம்

[கல்வயல்]

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நுண்கலைப் பீடத்தின் நடனத்துறைக்கு விரிவுரை மண்டபங்கள் பற்றாக்குறையாக இருப்பதால் புதிய விரிவுரை மண்டபம்அமைக்கப் பட்டு வருகிறது.

இந்த நுண்கலைப் பீடம் ஆரம்பிக்கப்பட்டு பலவருடங்கள் சென்றாலும் கட்டிட வசதி போதாமலிருப்பதாகவும் பயிலரங்குகள் சில மட்டுமேகட்டப்பட்டுள்ளதாகவும் போதிய நிலம் சொந்தமாக இருப்பதால் நிதி கிடைக்கும் பட்சத்தில் மேலும் பல கட்டடங்கள் அமைக்கப்பட்டு மாணவர் விரிவுரையாளர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும்செய்யப்படும் எனவும் தெரிவிக்கப் படுகிறது. (செ-111)

## விசாரணைகளுக்கு சமுகமளிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை நடாத்தி வரும் விசேட புலனாய்வுப் பிரிவினர், கீழ் வருவோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு வசதியாக அவர்களுடைய உறவினர்கள் மற்றும் சாட்சிகளை கீழ் வரும் பொலிஸ் நிலையங்களுக்கு சமுகம் கொடுக்குமாறு அறிவித்துள்ளனர்.

**யாழ்ப்பாணப் பொலிஸ்நிலையம்**

மரியதாஸ் மரியகுரத்தி 896, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஏ. கே. ரகுமான் 79, பீச் றோட், யாழ்ப்பாணம்.

எ. அன்ரன யூலியஸ் 16/3, மவுண்காமல் றோட், யாழ்ப்பாணம்.

தவரட்ணம் கதிர்காமவன் 456, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்,
சாட்சிகள்;-முத்தையா கிருபாகரன் சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு.

சுப்பிரமணியம் ரமணி மாசியம்பதி, சண்டிலிப்பாய்.
கந்தசாமி காளிகோயிலடி, திருநெல்வேலி.

பரராஜசிங்கம் கஜேந்திரன் 21/5, வைமன் வீதி, யாழ்ப்பாணம்,
சாட்சி:-கமலதேவி பரராஜசிங்கம்

கந்தையா அருள்தரன் 22/15, வைரவர் கோவிலடி, அரியாலைமேற்குஅரியாலை.
சாட்சி:- கே. சத்தியகுமார் 81, கலைமகள் வீதி, அரியாலை மேற்கு;

செல்லத்துரை செல்வகுமார் 11/4, பென்ரிக் கோஸ்கண்டி வீதி, யாழ்ப்பாணம்;
சாட்சி- செல்லத்துரை பரமநாயகி

சுந்தரம் ரவீந்திரன் 54/9, ஆத்திசூடிகந்தர்மடம்,
சாட்சி-சிவிரஞ்சினி ரவீந்திரன்

சவாரிமுத்து அன்ரன் ஜெயக்குமார் 136, ஆத்திசூடி கந்தர்மடம், யாழ்ப்பாணம்;
சாட்சி- மாலினி அன்ரன் ஜெயக்குமார்

சிவாஜினி ஆறுமுகம்4,2 ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்;
யாழினி மகேஸ்வரன் 3/3,2 ஆம குறுக்குதெரு, கொழும்புத்துறை, யாழ்பபாணம்.
சாட்சிகள்- சின்னத்துரை ஆறுமுகம், ஆறுமுகம் மகேஸ்வரன்

பண்டாரி ராஜசிங்கம் 227, கலைமகள் வீதி, நல்லூர்.
சாட்சி- பண்டாரி துரைசிங்கம்

**சுன்னாகப்பொலிஸ்நிலையம்**

யேசுதாஸ் ஸ்ன்ராலி ஜீவா நாவற்குழி கிழக்கு, கைதடி;
சாட்சி- யேசுதாஸ் பிரான்சிஸ்கா

சின்னத்தம்பி சிவலிங்கம் சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்
சாட்சிகள்- சின்னத்தம்பி அரசகுமாரி12/4, சபாபதிப் பிள்ளை வீதி, சுன்னாகம்;
பரமலிங்கம், சின்னத்தம்பி சந்திரலிங்கம்;

கந்தசாமி சுபாஸ்கரன் வட்டுக்கோட்டை தெற்கு,
சாட்சி- ரேவதி (தாய்) கருணாகரன்

தவராசா சதீஸ்குமார் சாவற்கட்டு சுதுமலை,
சாட்சிகள்-கிருஸ்ணசாமி தவராசா, விஜயகுமார், உதயகுமார், ராஜகுமார்; (உ-10)

## இன்று ஒரு தகவல்

### உலகத்தின் கதி என்ன ஆவது?

இன்றைக்கும் உயிர் வாழும் இதே மனிதர்கள். இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு அப்பாலும் இப்படியே இருப்பார்களாயின், இந்த உலகத்தின் கதி என்ன ஆவது என்பதை எண்ணிப் பாருங்கள்: உலகத்தில்எந்தவிதமான புதுமையுமே அப்போது இருக்காது. எல்லோரும் பழைய மனிதர்கள், பழைய சிந்தனைகள், பழைய பழக்க வழக்கங்கள், பழைய கொள்கைகள், பழைய குறிக்கோள்கள், இப்படி எல்லாமே பழைமை மயமாய், உலகம் கிழடுதட்டிப் போய்க் காணப்படும்! உலகம் இப்போது எப்படியிருக்கிறது?

நாள் தோறும் பழைய மனிதர்கள் மறைந்து, கொண்டிருக்கிறார்கள். புதியகுழந்தைகள் பிறந்து அவை புதிய மனிதர்களாய் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அவர்களோடு கூடவே புதிய கருத்துக்களும், புதிய ஆராய்ச்சிகளும் வளர்ந்து, இவ்வுலகின் அமைப்பையே புதுமையாக்கி வருகின்றன. எனவே, இந்த உலகம் நாள்தோறும் புதுப் புதுப் பொலிவுடன் காட்சி அளிக்கிறது: அதுவே அதன் வளர்ச்சியின் தத்துவம். அதுவே அதனை ஓர் இன்ப நிலையமாக இலங்கச் செய்கிறது.

உலகம்இன்பமயமாக இருப்பதால் தான், அதில் வாழ்வதற்கு நாம் ஆசைப்படுகிறோம். அந்த இன்பத்திற்குக் காரணம் பழையன கழிதலும், புதியன புகுதலும் இங்கு இடையறாது நிகழ்ந்து கொண்டிருப்பதேயாகும். பழையன கழிதல் என்பதன் ஓர் அம்சம் தான் மனிதனின் மரணம்: எனவே, நாம் சாவுக்கு அஞ்சவேண்டியதில்லை. சாகத் தயாராக இருக்க வேண்டியது தான். வேறு வழி இல்லை.

நன்றி
கல்கண்டு 5-1-1967

# திருமலை மாவட்டத்தில் உடல்,உளரீதியில் பாதிப்புற்றோர் எண்ணிக்கை தினமும் அதிகரிப்பு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் சித்திரவதைகளுக்குள்ளாகி உடல் உளரீதியாக பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றது.

இவ்வாறு வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் வி.ஞானகுணாளன் தெரிவித்துள்ளார்.

சித்திரவதைகளுக்குள்ளாவோரில் தினமும் முப்பது தொடக்கம் நாற்பது பேர் வரையானவர்கள் சிகிச்சை பெறவருகின்றனர்.

ஆனால் ஐநூறிற்கும் அதிகமானோர் எவ்வித சிகிச்சைகளும் பெற்றுக்கொள்ளாமலிருக்கின்றனர்.

இவ்வாறு சிகிச்சை பெறாமலிருப்பவர்களை சரியாக இனங்கண்டு சிகிச்சை அளிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(செ-5)

## வடமராட்சி கிழக்கில் மலேரியாத் தாக்கம்

(வடமராட்சிகிழக்கு)

வடமராட்சி கிழக்குப்பகுதியில் மலேரியா நோய்வேகமாகப் பரவி வருகின்றது.

நுளம்புப்பெருக்கத்தைக்கட்டுப் படுத்தாமையினாலேயே மலேரியா நோய் வேகமாகப் பரவுவதாகவும் நுளம்பு பெருக்கத்தைக்கட்டுப்படுத்துவதில் மக்கள் மிகவும்முனைப்பாகச் செயற் படவேண்டும் எனவும் வைத்திய நிபுணர்கள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்கள்.

(செ-42)

## மிளகாய்க் கன்றுகளில் நோய்த் தாக்கம்

(கல்வயல்)

அச்சுவேலி, ஆவரங்கால், சிறுப்பிட்டிப் பகுதிதோட்டங்களில் உள்ள மிளகாய்க்கன்றுகளில் இலைச்சுருள் குருமன் நோய்த்தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்நோய் காரணமாக மிளகாய்உற்பத்தியில் பெரும் வீழ்ச்சிகாணப்படுகின்றது.

விதைகளுக்கு தொற்று நீக்கிகள் பாவிக்கப்பட்டு, உரிய வளமாக்கிகள் பாவிக்கப்பட்டால் இந் நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்தலாம் என இப்பகுதி விவசாயப் போதனாசிரியர் தெரிவித்துள்ளார்.

(செ-111)

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

சாரதி ஆலோசகர்களை பதிவு செய்வதற்கானஎழுத்து மூலப் பரீட்சைக்காக தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி யூன் 14 ஆம் திகதியாகும்

பரீட்சை யூலை மாதம் 22 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் இப் போட்டிப் பரீட்சை பற்றிய மேலதிக விபரங்களை இம்மாத 11 ஆம் திகதி வர்த்தமானியில் பார்வையிடலாம். (உ-3)

## அபிவிருத்தி தொண்டர்களுக்கு பயிற்சி வகுப்புக்கள்

(வடமராட்சிகிழக்கு)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் அபிவிருத்தித் தொண்டர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள குடத்தனை, மணற்காட்டுப்பகுதிகளில் இடம் பெறவுள்ளது

இதேவேளை அபிவிருத்தித் தொண்டர்களை சிரமதானப் பணிகளில் ஈடுபத்தினால் அவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

[செ-43)

## வன்னிப்பகுதியிலிருந்து அரிசி எடுத்துவர அனுமதி

[வவுனியா]

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பிரதேசத்தில்இருந்து முதற் தடவையாக பச்சை அரிசி எடுத்து வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வவுனியா அரசஅதிபர் கே.கணேஷ் தெரிவித் துள்ளார்.

இந்தஅரிசி வவுனியா சோதனைச்சாவடி பறையனாலங்குளம் ஊடாகப்பத்து லொறிகளில் எடுத்து வரப்படவுள்ளது. பத்து லொறிகளிலும் ஒருலட்சம்கிலோஅரிசிஎடுத்து வரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் பெருமளவு நெல் விளைச்சலை அடுத்து அதனைச்சந்தைப் படுத்தமுடியாமல் இருந்தமையும் இங்கு குறிப்பிடத் தக்கது; (ம)

## ப.நோ.கூ.ச கிளையில் திருட்டு

(மானிப்பாய்]

மானிப்பாய் ப.நோ.கூ: சங்கத்தின் ஆனைக்கோட்டை கிளை நிலையமொன்றில் அண்மையில்நள்ளிரவுவேளை கதவை உடைத்துஉள்ளே நுழைந்த திருடர்கள் அங்கு நிவாரணத்திற்குவழங்குவதற்காக வைக்கப்பட்டிருந்த பால் மா வகைகள் சோடா வகைகள் என்பனவற்றையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இவற்றின் பெறுமதி 35ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. (உ-120)

## சுயதொழிலில் ஈடுபடுவோர் குறித்த விபரம் திரட்டப்படுகிறது

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் சுய தொழில் மேற் கொள்வோரின் விபரங்கள் திரட்டப்பட்டு பதிவுகள் இடம் பெற்று வருகின்றன.

ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் அந்தந்த கிராம சேவையாளர் ஊடாக பதிவினை மேற்கொள்ள முடியும்.

ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய கைத் தொழில் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இப் பதிவுகள் இடம் பெற்று வருகின்றன.

கைப்பணி, சிறு கைத் தொழில்த் துறையில் பயிற்சி பெற்றவர்களும் பதிவினை கிராம சேவகர் ஊடாக பதிவு செய்ய முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

(உ-75)

## அபிவிருத்தி பரிசோதகர் நியமனம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகஅபிவிருத்தித்தொண்டர் பயிற்சி நிலையத்திற்கு அபிவிருத்திப் பரிசோதகர் இருவர் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப் பட்டுள்ளனர்.

பெரியவிளான் இளவாலையைச் சேர்ந்த த கீதா, ஏழாலையைச்சேர்ந்த த.கரிகரன் ஆகியோர் இந் நியமனத்தை பெற்றவர்களாவர். [உ-120

## அன்னையர் தினத்தை ஒட்டிய கவிதைகள்

### அந்த நாள்

எனக்கு வருடத்தில் ஒரு நாள் மட்டும்
பத்திரிகை தேவையில்லை
ஏனெனில் எனைப்பார்க்க - என்
புத்திரன் வரும் அந் நாள்
''மே 14'' அன்னையர் தினமாயிருக்கும் !

க. தர்மினி
அங். இல- 04

### அன்னையைப் போற்று

ஈரைந்து மாதம் சுமந்து - இங்கு
உனை மெல்ல எடுத்தாள மகிழ்ந்து
பாரிலே உயர்ந்து நிற்பவள் - வரும
தடையினை உடைத்து வளர்ப்பவள்.

அகிலத்தில் நிகரவளுக் கில்லை - தரும்
அன்புக்கு அவளே எல்லை
வாகை சூடியவளைப் போற்று - இனி
வீசும்ம உன்பக்கம் காற்று.

கி. அ. தில்லைதாசன்
அங். இல- 36

### தெய்வத் திருத் தாய் . . .

உயிர் மேலாய்க் காப்பாளே அன்னை! - அவள்
அயராமல்ச் சுமப்பாளே உன்னை
தயவுடன் கனிவுடன் இருப்பாளே - என்றும,
தரணியில் தீபமாய் ஒளிர்வாளே.

தெய்வம் போல் கவலைகள் தீர்ப்பவள் - புதுத்
தேன் போலே வளமாக இனிப்பவள
உயர் வாகச் சேயினைக் காப்பவள - தினம்
இமைபோலே இனிதாகப் பார்ப்பவள,

வையகம் என்றென்றும் வாழட்டும் - தாயை
வானங்கள் வணங்கியே போற்றட்டும
தாயினை அன்பாலே வென்றிடு - அவள்
துயர்தனைத் தடுத்து நீ உடைத்திடு.

இ. விஜயரூபன்
அங். இல- 163

## புத்துலகப் பாதைக்கான கண்காட்சிப் போட்டி

(கோப்பாய்)

புதிய கல்விச் சீர்திருத்தத் திற்கமைவாக ''புத்துலகிற்கான பாதை'' என்னும் தொனிப் பொருளில் பாடசாலை மட்டத்தில் மாணவர் திறன் கண்காட்சியினை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு யாழ்-வலயக் கல்விப் பணிப்பாளர் யாழ்: வலயப் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

மாகாணக் கல்விப் பணிப்பாளரினது சுற்று நிருபத்துக்கமைவாக ஆக்கங்களைத் தயார்ப்படுத்துமாறும்; இக் கண்காட்சிப் போட்டிகள் பாடசாலை மட்டம், வலய மட்டம், அகில இலங்கை மட்ட ரீதியாகவும் நடைபெறவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(செ-79)

## நிர்வாகசபை தெரிவு

(மல்லாகம்)

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் கோவில் சனசமூக நிலையத்தின் நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் மேற்படி நிலையத்தில் இடம் பெற்றது. (உ-122)

## பனையால் வீழ்ந்தவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஓலை வெட்டுவதற்காக பனை மரத்தில் ஏறியவர் தவறுதலாக கீழே வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குப்பிளான் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான செ. தவராசா (வயது- 60) என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

(செ-10)

# அடுத்த தேர்தலில் தொழிற் கட்சியே பிரிட்டனில் ஆட்சிப் பீடமேறும்

(லண்டன்)

அடுத்த மாதம் பிரித்தானியாவில் நடைபெறும் தேர்தலில் தொழிற் கட்சியே மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் என்று கருத்துக்கணிப்புத் தெரிவிக்கிறது.

பிரித்தானியாவில் ஆளும் தொழிற்கட்சியும் கன்சவேற்றிவ் கட்சியும் குறிப்பாகப் போட்டியிடுகின்றன.

ஆளும் தற்போதைய பிரதமர் ரொனிபிளயரின் தொழிற் கட்சி தனது கடந்தபத்தாண்டின் சாதனைகளை வைத்துப் பிரசாரம் செய்துவருகிறது. இக்காலங்களில் நாட்டில் வேலையற்றோர் பிரச்சினை ஓரளவு தீர்ந்துள்ளது நாட்டில் வட்டி வீதம் குறைந்துள்ளது. இவைகளை வைத்தே தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளது.

லண்டன் ரைம்ஸ் பத்திரிகையின் கணக்கெடுப்பின்படி இருபத்திநாலு புள்ளிகள் கான்சவேற்றிவ் கட்சியை விட தொழிற்கட்சி கூடுதலாகப் பெற்றிருக்கிறது.

இதேவேளை இன்னொரு லண்டன்டெயிலிரெலி சிறாப் பத்திரிகையின் கணிப்பீட்டின்படி தொழிற்கட்சிக்குப் பதினேழு புள்ளிகள் கூடுதலாக இருக்கின்றன.

இத்தேர்தலில் தொழிற் கட்சி மீண்டும் ஆட்சியை அமைக்கும்என்று தெரிய வருகிறது. (து)

# பிராணியைக் கொன்ற அதிபர் பதவி நீக்கம்

(தெஹ்ரான்)

ஈரானியப் பாடசாலை ஒன்றில் மாணவர்களுக்கு மதியில் செல்லப் பிராணி ஒன்றை தீயிலிட்டு கொழுத்திய பாடசாலை பெண் அதிபர் ஒருவரை அந்நாட்டு கல்வியமைச்சு பதவிநீக்கம் செய்துள்ளது.

ஆசிரியை ஒருவர் தனது பிரியமான மாணவிக்கு அன்பளிப்பு செய்யக் கொண்டு வந்த செல்லப்பிராணியையே அதிபர் தீயிலிட்டுக் கொழுத்தியுள்ளார்.

ஈரானிய மிருகவதை தடுப்பு அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டினையடுத்தே இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இக் கொலை பற்றிய மனு, நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அதிபருக்கு மேலும் கடுந்தண்டனை வழங்கப் போவதாக ஈரானிய மிருகவதை அமைப்பும்மாணவசமூகமும் தெரிவித்துள்ளன. (செ-7)

# பிலிப்பைன்ஸின் இன்றைய தேர்தல் நாட்டின்தலைமையை தீர்மானிக்கும்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் அரசின் காங்கிரஸ், செனட், மற்றும் நகர சபைகளுக்கான தேர்தல் இன்று தொடங்கியுள்ளது.

இத்தேர்தலில் மூன்று கோடியே அறுபது இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கின்றார்கள். செனட்டுக்கு நடைபெறும் தேர்தலும் காங்கிரஸிற்கும் நடைபெறும் தேர்தலும் முக்கிய இடம் வகிக்கின்றன.

ஆளும் கட்சியும் எதிர்க் கட்சியும் இத்தேர்தல் முடிவை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதேவேளை முன்னாள் பிலிப்பைன்ஸ் அதிபர் ஜோசேப் எஸ்ராடா பதவி விலக்கப்பட்டதும் தண்டிக்கப்பட்டதும் சரியா, புதிய அதிபர் குளோரியம் பதவி ஏற்றது சரியா என்பது தேர்தல் மூலம் வெளி வரும் என்று மக்கள் எதிர் பார்க்கிறார்கள். (து)

## தீ விபத்தினால் நான்கு செய்மதிகள் கட்டுப்பாடு இழப்பு

(மொஸ்கோ)

ரஷ்யாவின் 'சேர்புகோவ்' என்ற செய்மதி கட்டுப்பாட்டு நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் நான்கு இராணுவ செய்மதிகள் கட்டுப்பாட்டை இழந்துள்ளன.

இருந்த போதிலும் ஏனைய செய்மதிகளுடனான தொடர்புகள் துண்டிக்கப்படவில்லை என மேற்படி நிலையத் தலைவர் அறிவித்துள்ளார்.

இந் நிலையத்தில் ஏற்பட்ட மின் ஒழுக்கினாலேயே இத் தீ விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தீயை அணைப்பதில் நூற்றுக்கும் மேற்பட்ட தீயணைப்பு படையினர் ஈடுபட்டனரென்றும், இவ்விபத்தில் எவரும் காயமடையவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றன. [செ-3]

# வழக்கில் தண்டனை பெறுபவர் முதல்வராவதில் பிரச்சினையில்லை

(சென்னை)

ஊழல் வழக்கில் தண்டனை பெறுபவர் முதல்வராவதில் பிரச்சினை ஏதுமில்லை என்று நடிகரும் வழக்கறிஞருமான சோ தெரிவித்தார்.

ஜெயலலிதா முதல்வராவாரா என்ற கேள்விக்குபதிலளிக்கையிலேயே 'சோ' இராமசாமி மேற்படி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்; முதல்வரானதன் பின் தேர்தலில் நிற்பதற்கு செல்வி ஜெயலலிதா நீதி மன்றிடம் கோரினால் முன்னைய தீர்ப்பு செல்லுபடியாகுமோ என்பது சந்தேகமேயென்று தெரிவித்தார்.

இதே கேள்வியை முன்னாள் அமைச்சர் சிதப்பரத்திடம் கேட்டபோது அவர் கருத்துத் தெரிவிக்கையில், ஒருவர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டாலோ அவர் வகிக்கும் மந்திரிப் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று இருக்கும் போது தண்டனை பெற்றவர் எப்படி முதல்வராகச் சத்தியப் பிரமாணம் செய்ய முடியும் என்று கேட்டார். (து)

## உலக தரிசனம்

## தமிழகத்தில் தேர்தல் முடிவின் பின் ஊர்வலங்களுக்குத் தடை

(சென்னை)

தமிழக தேர்தல் முடிவுகளை அடுத்து வெற்றி ஊர்வலங்களுக்கு தடை விதிக்கப் பட்டுள்ளது.

ஆங்காங்கே இடையிடையே தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டதும் மக்களை வெற்றிக் கோசங்கள் எழுப்புப ஊர்வலங்களைச் செய்ய வேண்டாமென்றும் ஒலிபெருக்கிகள் மூலம் உணர்வைத் தூண்டும்பாடல்களோ வசனங்களோ ஒலிபரப்ப வேண்டாமெனறும் அரசு உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை மக்களுக்கு தேர்தல்முடிவுகளை உடனுக்குடன் வானொலி மூலமாகவோ தொலைக்காட்சி மூலமாகவோ அறிவிக்கப்படுமென்று அரசின் குறிப்பொன்று தெரிவிக்கிறது. (து)

## பிரதமர் வாஜ்பாய் மலேசியாவிற்கு விஜயம்

[புதுடில்லி]

நட்புநாடான மலேசியாவிற்கு அரச முறைப்பயணமாக இந்தியப் பிரதமர் வாஜ்பாய் சென்றுள்ளார்.

மகத்தான முறையில் வரவேற்பளிக்கப்பட்டுள்ள இந்திய பிரதமரும், மலேசிய பிரதமர் மகிதிர் முகமட்டும் பலதரப்பட்ட விடயங்களில் ஒத்துப்போயுள்ளார்கள். இருவருக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன.

இருதரப்புகளுக்கிடையேயும் வர்த்தகம், தொலைத்தொடர்பு, கல்வி மற்றும் மென் பொருள்கள் சம்பந்தமானவிடயங்களில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன.

நீண்ட நாள் உறவு நாடுகளான இந்தியாவும் மலேசியாவும் பிராந்திய ஒத்துழைப்பு போன்றவற்றிலும் சேர்ந்து செயற்பட இருக்கின்றன.

பிரதமரின் விஜயத்தால் தென்கிழக்காசிய நாடான மலேசியாவும் நன்மையடையுமென நம்பப்படுகிறது. [து]

## ஜனாதிபதி முஸபேனி சத்தியப் பிரமாணம்

(கம்பாலா)

உகண்டா ஜனாதிபதியாக 5 ஆவது தடவையாகவும் யோவேரி முஸபேனி சனிக்கிழமை சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

1986 ஆம் ஆண்டிலிருந்து உகண்டா ஜனாதிபதியாக இருந்த யோவேரி முஸபேனி கடந்த மார்ச் மாதம் நடைபெற்றஜனாதிபதித்தேர்தலில் அமோக வெற்றி பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ)

## செய்திப்பரல்

★ முன்னாள் ரஷ்யப்பிரதமர் செர்னோமிர், உக்ரைனில் ரஷ்யத்தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

★ 270 ஆயிரம் டொலர் முதல் 350 ஆயிரம் டொலர் வரையிலான ரோல்ஸ் ரோய்ஸ் கார்களை உற்பத்தி செய்ய, பென்ட்லி மோட்டார் கார் நிறுவனம் முன்வந்துள்ளது.

★ உலக ஊடகத்துறை கோடீஸ்வரர் ரூபர்ட் மாடோச் 70 வயதில் தந்தையானார்.

★ கிறிஸ்டியின் கலைப் பொக்கிஷ ஏலவிற்பனையில் பிரபல ஓவியர் பிக்காஸோ வரைந்த அவரது மனைவியின் படம் விற்கப்படவில்லை.

★ லைபிரியா தனது நாட்டிலுள்ள சகல தூதரகங்களுக்கும் முழு நேர பாதுகாப்பை வழங்குவதாக உறுதியளித்துள்ளது. (செ-3)

## அணுவைக் குறைப்பதே ஆபத்தை குறைக்கும் வழி அமெ. ஜனாதிபதி தெரிவிப்பு

(புதுடில்லி)

அணு ஆயுதத்தை குறைப்பது பற்றி அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்த கருத்தை இந்தியப் பிரதமர் வாஜ்பாய் வரவேற்றுள்ளார்.

"பொப் தொன்" அணு குண்டு சோதனை இடம்பெற்று 3 ஆண்டுகள் நிறைவையொட்டிபுதுடில்லியில் தேசிய தொழில் நுட்பதினம் கடைப்பிடிக்கப்பட்ட போது அதில் உரையாற்றிய வாஜ்பாய் அணு ஆயுதம் குறைப்பது ஆபத்தைக் குறைக்கும் திட்டம் என அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்ததை வரவேற்றுள்ளார். (செ)

## நாவலாசிரியர் நாராயணன் காலமானார்

(சென்னை)

புகழ் பெற்ற நாவலாசிரியரும் மக்களவை உறுப்பினருமான ஆர். கே. நாராயணன் காலமானார்.

கடந்த சில தினங்களாக மருத்துவ மனையில் அனுமதிககப்பட்டு நேற்று அதிகாலை இவர் காலமானார்.

1906 ஆம் ஆண்டு பிறந்த இவர் கல்வி கற்ற பின் சில காலம் ஆசிரியராகக் கடமையாற்றினார். பின் முழுநேர எழுத்தாளரானார் 1935 இல் தனது முதலாவது நாவலை வெளியிட்டார். தொடர்ந்து பல நாவல்களை எழுதி வந்தார்.

1955 இல் இவர் எழுதிய "கயிட்" என்ற நாவலுக்கு சாகித்திய அக்கடமி பரிசு கிடைத்தது. இவருடைய எழுத்து வன்மையையும் ஆற்றலையும் மதிப்பிட்ட இந்திய அரசினர் பத்ம பூசணம் விருதினை வழங்கி கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (து)

## தேசிய பாடசாலைகளுக்கு புலமைப் பரிசின் அடிப்படையில் அனுமதி

(கொழும்பு)

புலமைப்பரிசின் அடிப்படையிலேயே இனி தேசிய பாடசாலைகளுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த அறிவித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு தொடக்கம் புதிய கொள்கைத் திட்டத்தின் அடிப்படையிலேயே மாணவர்கள் சேர்க்கப்படவுள்ளனர்.

இப் புதிய கொள்கைத் திட்டம் யூன் மாத நடுப் பகுதியில் வெளியிடப்படும் என கல்வியமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த தெரிவித்துள்ளார். (செ)

## கணவனின் பிரிவினால் மனைவி மரணம்

[கொழும்பு]

கணவனின்பிரிவைத் தாங்க முடியாத மனைவி மறுநாளே மரணத்தைத் தழுவிக் கொண்டதுயரச்சம்பவம் திருமலை கிண்ணியாவில் இடம் பெற்றுள்ளது.

எஸ். மைமூன் நாச்சியா (வயது-80) என்னும் மூதாட்டியே தனது 90 வயதுக் கணவரின் பிரிவைத் தாங்கமாட்டாது உயிர்துறந்தவராவார்.

இது வரை காலமும் எந்தவொரு சிறுபிணக்குமின்றி வாழ்ந்து வந்த இத்தம்பதியரில் கணவரான ஏ. றஹீம் என்பவர் கடந்த வியாழக்கிழமை மரணமானார். (செ)

அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள் அழிக்கல் ஆகா அரன்
- குறள்

# வலம்புரி

## சங்கரியின் நல்ல முடிவு

பொதுஜனஐக்கிய முன்னணி அரசுக்கெதிராக ஐக்கியதேசியக்கட்சிகொண்டு வர இருக்கும் நம்பிக்கை இல்லாதீர்மானம்ஓர்'முட்டாள்த்தனமான முடிவு' என கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும் எம்பியுமான ஆனந்தசங்கரி கருத்துக் கூறியுள்ளார்.

1983ம் ஆண்டு தமிழ் மக்களை வெட்டிக் கொலை செய்தும் வடபுலத்து யாழ்ப்பாணத்தில் அப்போது தேசிய பந்தோபஸ்த்து அமைச்சராக இருந்த லலித் அத்துலத்முதலியின் நேரடிக் கண்காணிப்பில் 'சகடைவிமானங்கள்' பீப்பாய்க் குண்டுகளை வீசி தமிழர்களின் உயிரைக் குடித்ததையும் தமிழ்மக்கள் மறந்தாலும் ஐக்கியதேசியக் கட்சியின் ஆட்சி தந்த பரிசாக இன்றும் தம் வீடுகளில் உறவுகளின் படங்களுக்கு மாலையிட்டு விளக்கேற்றி வைத்துக் கண்ணீர் விடும் மக்கள் ஒருபோதும்மறக்க மாட்டார்கள், மறக்கவும் முடியாது.

இந்நிலையில் அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு தமிழ்க் கட்சிகளிடம் ஐ. தே. க. ஆதரவு கேட்பது விசித்திர மாகவுள்ளது. அதே நேரம் ஆனந்தசங்கரி எம்பியின் பதில் மிக மிகப் பொருத்தமானது மட்டுமன்றி தமிழ் மக்களின் எதிர்காலம்பற்றிய தூரநோக்குடன் கூடியதென்பதும் மறுக்க முடியாத உண்மை

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை ஐ. தே.கயும், பொது ஜன ஐக்கிய முன்னணியும் கொழுக்கட்டையும், மோதகமுமே ஆனால் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சு வார்த்தையை எப்படியாவது நடத்தவேண்டுமென்பதில் நோர்வே அரசு முனைப்புடன் செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

நோர்வேயின் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தை அரசும் புலிகளும் ஏற்றுக் கொண்டுள்ளதுடன் விசேட தூதுவர் எரிக் சோல்ஹெய்மும் பல தடவைகள் இலங்கை வந்து சென்றுள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில் அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தமிழ் எம்பிக்கள் வாக்களிப்பார்களாயின் அஃது வரலாற்றுத் தவறாகவே அமைவதுடன் நோர்வே அரசு கூட தமிழர் விடயத்தில் தவறான ஓர் எண்ணக் கருவையே எடுத்துக் கொள்ளும்.

# எந்த மதத்தையும் அரவணைக்கும் இந்து மதம்

# தோற்றுவிக்கப்படாதது தானே முகிழ்ந்த மதம்

**திருமறைக்கலாமன்றதமிழ் விழா - 2001**
**11. 05. 2001 வெள்ளிக்கிழமை கலைத்தூது மணி மண்டபத்தில் சைவ சித்தாந்தம் கருத்தரங்கிற்கு தலைமை வகித்து, யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி கௌரவ இ.த.விக்னராசா ஆற்றிய தலைமையுரை (ஆ-ர்)**

## இ.த. விக்னராசா

(யாழ். மாவட்ட நீதிபதி)

(நேற்றைய தொடர்ச்சி)

### சுவாமி விவேகானந்தர்

ஆனால், ''முழு உலகுக்கும் ஒளியாய் இருக்கும் இந்து சமயத்தைச் சேர்ந்தவன் என்பதனால் பூரிப்படைகிறேன்.'' எனப் பெருமையுடன் சிக்காக்கோவில் சிலாகித்த சுவாமி விவேகானந்தர் இந்து சமயத்தைத் தனித்துவப்படுத்திக் காட்டுவன. அதன் சகிப்புத்தன்மையும், சுய விமர்சன சுதந்திரமும் ஆகும் என்ற இவரின் அணுகுமுறை வித்தியாசமானது. அனைத்து மதங்களும் சமமானவைகளே என்பதை வலியுறுத்தினார். இதனால் இந்து மதம் பிற மதங்களுக்குத் தாழ்வானதன்று என்பது விளக்கமுற்றது. அதே சமயத்தில் இந்து சமயம் உலகம் தழுவியதென்பதும் ஐயத்திற்கிடமின்றித் தெளிவாக்கப்பட்டது.

மதங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எதுவித ஐயப்பாட்டுக்கும் இடமில்லை. ஒவ்வொரு மதத்தவனும் தனது மதத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற கடப்பாடு இருக்கிறது. எந்த மதத்தையும் பின்பற்றவோ வழிபடவோ எவருக்கும் சுதந்திரம் உண்டு. எல்லா மதங்களையும் அங்கீகரிக்கின்ற மதிக்கின்ற தன்மை எல்லா மதங்களைச் சார்ந்தவர்களுக்கும் அவசியம். ஆனால் ஒரு மதத்தின் தனித்துவங்களை விட்டுக் கொடுக்கும் அளவுக்கு பெருந்தன்மை அவசிய மற்றது. தத்தமது மதங்களைப் பின்பற்றிப் பாதுகாக்கும் அதேவேளையில் மற்ற மதங்களைப் தாழ்த்தாமல் கண்டிக்காமல் அந்த மதத்தவர்களுக்கு ஊறு விளைவிக்காமல் இருத்தல் வேண்டும்.

எல்லா மதங்களுமே அன்பையும், பாசத்தையும், பண்பையுமே போதிக்கின்றன. அத்துடன் நல்லவற்றைச் செய்யவும், தீயவற்றைத் தவிர்க்கவும் மதமானது ஒரு வழிகாட்டியாக ஒளிவிளக்காக உதவுகிறது.

### சமயக்கல்வி

மனிதனை மனிதத் தன்மையோடு கூடிய மனிதனாக மாற்றுவது கல்வி என்று மனித நாகரிக வரலாறு தொடங்கிய காலத்திலிருந்து சிந்திக்கப்பட்டு வந்தது. கல்வியின் ஆரம்பம் சமயக் கல்வியாக ஒழுக்கம் கல்வியாக அறநெறிக் கல்வியாக இருந்தமையை கல்வி வரலாறு குறிப்பிடுகிறது. கல்வியை வழங்கிவந்த ஆசான்கள் யாவரும் சமய அறிஞர்கள், அருளாளர்கள், சமயச் சான்றோர்களாகவே விளங்கினார்கள்.

''மனிதனில் ஆழ்ந்து கிடக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்துவது சமயம்'' என்று சமயத்திற்கும், ''மனிதனில் ஆழ்ந்து கிடக்கும் பரிபூரணத்தை வெளிப்படுத்துவது கல்வி'' என்றுகல்விக்கும் வரைவிலக்கணம் தருகிறார் சுவாமி விவேகானந்தர். இதில்இருந்துசமயக்கல்வி மனிதர்களுக்கு எத்துணை அவசியம் என்பது புலப்படுகிறது.

மனிதனின் உலகியல்வாழ்க்கையை ஆன்மீகம், தெய்வீகம், பரிபூரணம் நிறைந்ததாக நெறிப்படுத்துவது சமயமும் கல்வியுமாகும். உலகில் வாழ்வாங்கு வாழ்தல், நல்ல வண்ணம் வாழ்தல், மனிதத் தன்மைகளோடு வாழ்தல் என்பன உலகியலுடன் ஆன்மீகமும் கலக்கும் போதே எய்தப்படுகின்றன.

மனிதர்கள் ஆன்மீக ஒருமைப்பாட்டினை உணர்ந்து ஒழுகுவதற்கும் உலகை ஒன்றாகக் காணும் சர்வதேசியத்தை அனுசரிப்பதற்கும் அவர்களுக்கு உறுதுணையாய் அமைந்த தூய நற்கல்வி அண்மைக் காலங்களிலிருந்து உலகியல் சார்ந்த கல்விக்கு இடமளித்து ஒதுங்கிக் கொண்டது. கற்காலக் கல்வி முறையில் ஆன்மீகம், மானுடம், விழுமியம் என்பன நழுவ விடப்பட்டு வருவதையும், வேறு பல உலகியல் நோக்கங்கள் இடம்பெற்றிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. பாடசாலையில் வழங்கப்படும் சமயக் கல்வியில் கூட இதே நிலைமை காணப்படுகிறது.

### அழியும் ஆத்மீக பண்பாடுகள்

மானுட நேயம், கடமை கட்டுபபாடு, கண்ணியம் இறை நம்பிக்கை, பெற்றோர், பெரியோர் மூத்தோர் ஆகியோரை மதித்தல், பிறர் நலம் பேணுதல், உண்மை, நீதி அமைதி, நல்லொழுக்கம், அகிம்சை என்பவற்றை வாழ்க்கையில் அனுசரித்தல், சமூகநீதி, சட்டம், ஒழுங்கு ஆகியவற்றுக்குக் கட்டுப்படுதல், ஊழல்களைத் தடுத்தல், சூழலை மாசடையாது பாதுகாத்தல் ஆகியன சமுதாயத்தில் அருகிக் கொண்டே வருகின்றன. அநீதிகள், ஊழல்கள், துர்நடத்தைகள், கொடுமைகள், என்பன பெருகி வருகின்றன.

மனித குலம் அதற்கே உரித்தான பண்பாடு, ஆத்மீக விழுமியங்களை இழந்து கொண்டு வருதலை இந்நிலைகள் உணர்த்துகின்றன, தற்கால கல்விமுறை இதனை ஊக்குவிக்கின்றனவோ என என்னத்தோன்றுகின்றது;

நாம் வாழும்யுகம் விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்தியில் அதி தீவிர வளர்ச்சி கண்டுள்ள காலப்பகுதியாகும். கல்வியே அதற்குக் காரணம். இதன் பயனாக மக்களின் பொருளாதாரம், வாழ்க்கை வசதிகள், ஆடம்பரங்கள் என்பன செழித்து ஓங்குகின்றன. நாகரிககிகள் வளர்ந்துள்ளது. ஆனால் 'நயத்தக்க' நாகரிகமாக அது அமையவில்லை. அதனால் மக்கள் வாழ்க்கையில் அமைதி, மகிழ்ச்சி, சமாதானம் என்பன காணப்படுதல் அரிதாகி விட்டது;

மனிதகுலம் இன்று எதிர்நோக்கும் பெரும் பிரச்சினை என்னவென்றால், விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகளில் அதி தீவிர வளர்ச்சிக்கு இணையாக மானுடப் பண்புகள், விழுமியங்கள் உள்ளிட்ட ஆன்மீகத்துறை விருத்தி பெறாமையாகும்.

மனித வாழ்க்கைத் தரத்தின் முன்னேற்றம், உலகியல் தேவைகளைப் பூர்த்தி செய்தல், ஆன்மீகத் தேவைகளை நிறைவு செய்தல் ஆகிய இரண்டினதும் சம வளர்ச்சியின் அடிப்படையில் சணிக்கப்பட வேண்டும். இன்று அவ்வாறு செய்யப்படுவதில்லை. சல்விபக்கச் சார்பாகி வருவதையே இது காட்டுகிறது.

### உலகியலும் ஆன்மீகமும் இணையவேண்டும்

குடும்பக் கடமைகள், சமூகக் கடமைகள், தொழிற் கடமைகள் முதலிய மனித கடமைகளில் ஆன்மீக உணர்வுகள் வெளிப்படுத்தப்படுதல் அவசியம். அப்பொழுதுதான் அவை சிறப்பாகஆற்றப்படும்.

விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் நிச்சயம் தேவை. ஆனால் அவற்றுடன் ஆன்மீகம் இணையும் போதுதான் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும ஆக்கத்திற்குப் பயன் தரும். அதே வேளை அழிவிற்குத் துணை போகாமலும் இருக்கும் உலகியலும் ஆன்மீகமும் இணைய வேண்டும். இந் நிலையை ஏற்படுத்துவதற்குத் தூய கல்வியே உறுதுணையாகும்.

ஆன்மீகம், மறு உலகமயப் படுத்தப்பட்டிருப்பதால் அதைப் புரிந்து கொள்வதில் கஷ்டப்பட வேண்டியுள்ளது. சமயவாதிகள் அதற்குப் பொறுப்பு உண்மையில் ஆன்மீகம் இவ்வுலகமயப்படுத்தப் படல் வேண்டும். ஆன்மீகம் சமூகமயமாதல் இன்றைய அவசிய தேவையாகவுள்ளது. கல்விமான்கள், சமய சான்றோர்கள் ஆகிய இரு தரப்பினரும் இதனைக் கருத்துக் கெடுத்து சமயம் சம்பந்தப்பட்ட பாடத்திட்டத்தைக் கற்பித்தல், கற்றல் அணுகுமுறைகளை, மதிப்பீட்டுமுறைகளைத் தயாரிக்க வேண்டும். அத்தோடு பாடசாலைக் கலைத்திட்டம் முழுவதிலும் அதனோடு கொள்ளப்படும் உறவிலும், உணர்விலும், செயற்பாடுகளிலும் ஆன்மீகம் ஊடுருவிச் செறிந்து இருக்க வேண்டும். ஆன்மீகம், மறுஉலகத்திற்காவது என்பதுடன் மட்டும் நிறுத்தி விடாது இவ்வுலக வாழ்வில் செழுமைக்கும் சீருக்கும் தேவையானது என்ற உணர்வு ஏற்படும் பட்சத்திலேயே கல்விகருத்துள்ளதாக அமையும். அதன் துணையுடன் அமைகின்ற வாழ்வும் சிறப்புள்ளதாகும்.

### சமயம் நடைமுறையில்இல்லை

சமயம் இன்று தத்துவ நிலையிலேயேகாணப்படுகின்றது அது இன்று நடைமுறை வாழ்வில் இல்லை என்பது பெரும் குறைபாடாக உள்ளது. வாழும் சமயம் என்ற பெயருடன் திகழ வேண்டும் என்றால் அச் சமயப் தத்துவத்தில் வாழ்ந்தால் போதாது. மக்களின் நடைமுறை வாழ்விலும் வாழ வேண்டியது மிகவும் அவசியம்.

வெறும் சாஸ்திர அறிவினால் மட்டும் என்ன பயன் ஏற்படும்? உண்மையிலேயே ஆன்மீக வாழ்க்கையில் முன்னேற்றத்தைப் பெற வேண்டுமானால், சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட உண்மைகளை நடைமுறை வாழ்க்கையில் அனுபவத்திற்குக் கொண்டு வர வேண்டும்

மனிதன் ஆன்மீக வளம் நிரம்பப் பெற்றவன் ஆன்மீக செல்வமுடைமை தான் மனிதனை வேறு உயிரினங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதோடு, அவனை உயர் திணையிலும் வைத்து சிறப்பிக்கின்றது

ஆன்மீகவளம் மனிதனுள் ஆழ்ந்து புதைந்து கிடக்கும் வரை மனிதனின் வாழ்க்கைக்குப் பயன்படப் போவதில்லை. ஆன்மீக விரயமேஏற்படும். இன்று காணபபடுவது ஆன்மீக விரயமே. அதன் விளைவு தான் இன்றைய மனித துன்பங்களும் துயர்களும் ஆகும். ஆன்மீகம் பயன்னுள்ளதாக அமைய வேண்டுமாகில், மனித வாழ்வில் அது வெளிப்பாடு ஆதல வேண்டும்.

### பரீட்சையை மையமாகக் கொண்ட சமயக்கல்வி

ஆன்மீகம் மனித வாழ்வில் வெளிப்பாடாதல வேண்டுமாயின் முக்கியமாக நம நாட்டுப் பாடசாலைகளில சமய பாடத் திட்டத்தை மாற்றியமைப்பது இன்றியமையாததாகு ஏனெனில் தற்போது அது சமய அறிவு சாந்த விடயங்களுககு முககியததுவம் வழஙகி கறபிததலும, கற்றலும பரீட்சையை மயமாகக் கொண்டே நடைபெறுகின்றன. இதனால்மாணவர்களின் சமயத திறன், மனப்பாங்கு, விழுமியப பண்புகள் உளளிட்ட ஆளுமைதொடர்பான நடத்தைய மாற்றங்களை அளவிட முடிவதில்லை. எனவே தான் பாடசாலை சமயக் கலவி மாணவர்களின்மனதில உள்ள ஆனமீகத்தை அவாகளுடையவாழ்வில் வெளிபபாடு செய்வதற்கு சமய பாடத்திட்டம கற்றலகற்பித்தல அணுகுமுறைகள, பாட சோதனை மதிபபீடு என்பவற்றில உறுதியான மாற்றங்களைக கொண்டு வருவதுடன் ஆசிரியர், பெற்றோர், வளர்ந்தோர் ஆகியோர் சமய நெறி முன்மாதிரியாக நடந்து காட்டுதலும அவசியமாகும்.

மனிதனுள் ஆழ்ந்து புதைநதிருககுமஆன்மீகவளமமனித வாழ்வில் வெளிப்பாடாகும் போதே மனிதன் அன்பு வழி நின்று சகிபபுத் தன்மை, பொறுமை, சமத்துவம், சகோதரத்துவம் என்பவற்றை நடைமுறை வாழ்க்கையில் பின்பற்றி சமுதாயத்திற்குத் தமது சொல்லாலும், செயலாலும சீரிய பங்களிப்பைச் செய்ய முடியும்.

மனிதனுள் ஆழ்ந்து புதைந்து கிடக்கும் ஆன்மீக வளம் பற்றியே சைவசித்தாந்தம் தத்துவங்களைக் கொண்டுளளது. இத் தத்துவங்களை முதல் முதலில் துலாம்பரமாகக் காட்டியவர் திருமூலர் ஆவார் திருமூலர் காட்டிய அன்பு வழி நின்று பக்தி மார்க்கத்தின் ஊடாக சாதி சமயப் பிரிவுகளையும் கடந்து தொண்டு நெறியாளர்களாக மனிதன் மாறுவதன் மூலம் நவீன விஞ்ஞான தொழில் நுட்ப உலகில் அழிவுப் பாதையை தவறாது ஆசபூர்வமான சமுதாய மறுமலர்ச்சி ய ஏற்படுத்தலாம்.

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகியதங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்
நியூ
ராதிகாஸ்
நகை மாளிகை
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(கி/ 1981)

## அரசு மீது நம்பிக்கையுண்டென்று எவ்வகையிலாவதுகூற முடியுமா?

# அ. இ. த. காங்கிரஸ் கேள்வி

(கொழும்பு)

பொதுஜனஐக்கியமுன்னணி அரசு மீது கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்த்து அரசுமீது நம்பிக்கையுண்டு எனவாக்களித்துவிட்டு எந்த முகத்துடன் வடக்குகிழக்கு மக்களை அவர்களது பிரதிநிதிகளென்று நாம் சந்திக்க முடியும்.

இவ்வாறு அரசுமீது நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்து அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசு இதுவரைதமிழ் மக்களுக்காக எதைச்செய்தது தமிழ்க்கட்சிகள் ஒன்றுபட்டு யுத்தத்தைநிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேசுமாறு நான்கு மாதகாலமாக அரசைவலியுறுத்தியது. விடுதலைப்புலிகளும் நான்கு தடவை யுத்தநிறுத்தத்தை நீடிப்புசெய்தனர் இவற்றையெல்லாம் அரசு உதாசினம் செய்ததுடன் தென்மராட்சியையே அழித்துவிட்டது.

அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கோ அல்லதுயுத்த நிறுத்தம் செய்து தமிழ்மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணவோ முன்வரவில்லை

இந்நிலையில் பொதுஜன ஐக்கியமுன்னணி அரசாங்கத்தை ஆதரிப்பதாக தமிழ் கட்சிகள் தமிழ்மக்களின் உணர்வுகளுக்கு மாறாக நடக்கக்கூடாதென அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

புதிய, பழைய வீ...
CDகளை வாடகை...
பெற்றுக் கொள்ள
மிலேனியம்
ஓடியோ
வீடியோ
சென்ரர்
238, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
(கி-1982)

## 14 வயது மாணவி மீது பாலியல் வல்லுறவு

[யாழ்ப்பாணம்]

உடுவில் மல்லாகம்பகுதியில் 14 வயது நிரம்பிய மாணவி ஒருவரை பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் அதே இடத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞரை இம்மாதம் 23ம் திகதி வரைவிளக்கமறியலில்வைக்குமாறும், பாதிக்கப் பட்ட பெண்ணை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் மல்லாகம்மாவட்ட நீதிபதிஉத்தரவிட்டுள்ளார். [ந]

### புரட்சித்தலைவரின்

வித்துள்ளனர்.

இவ்வாறு செல்வி ஜெயலலிதா தமிழகசட்டசபைத் தேர்தல் முடிவுகுறித்து கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

வெற்றிக்களிப்பில் செல்வி ஜெயலலிதா மேலும் கருத்துத்தெரிவிக்கையில

நடந்துமுடிந்தசட்டசபைத் தேர்தலில் மக்கள் தீர்ப்பை மகேசன் தீர்ப்பாக ஏற்றுக்கொண்டு எனதுசேவையை மக்களுக்காக அர்ப்பணிக்கவுள்ளேன்.

மறைந்த புரட்சித்தலைவர் எம். ஜி ஆரின் அடிச்சுவட்டில் உலகமெங்கும் பரந்துவாழுகின்ற தமிழ்மக்களின் குறிப்பாக ஈழத்தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதில் புரட்சித்தலைவரின் வழியை கடைப்பிடிப்பேன் என்றும் கூறியுள்ளார். [வ

### நிலையான

ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதேவை ஏற்பட்டது.

இல்லையேல் எப்படி இந்த பணியை என்னால் தொடர முடியும்?

இலங்கை அரசுக்கு எப்படி பயனுள்ள வகையில் உதவ முடியும்?

என்றும் அவர் மேலும் வினா எழுப்பினார்.

இருதரப்பும் பேச்சுவார்த்தை மேசைக்கு பல படிகளில் நெருங்கியுள்ளார்கள் ஆனால் சில விடயங்கள் பேச்சின் அடிப்படையில் தீர்மானிக்கப்படவில்லை நிலையான சமாதானம் அடையும் ஒருவழிதானபேச்சுவார்த்தை அது முடிவு அல்ல என்றும் தெரிவித்துள்ளார் எரிக்சோல்ஹெய்ம் அது குறிப்பிட்ட காலத்திற்கு கடினமானதாகவும் நிலைத்து நிற்பதாகவும் எதிர்பார்க்கலாம என்றுதெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தமது அமைப்பின் தடை நீக்க பற்றிய கோரிக்கை கடைசிநேர கோரிக்கையா? அல்லது ஏற்கனவே முன்வைக்கப் பட்டு வெளியிடப் படாத கோரிக்கையா? என்று அவரிடம்கேட்கப்பட்டபோது, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைதொடர்பாக துரதிஷ்ட வசமாக கருத்து கூறமுடியாத நிலையிலுள்ளோம ஆனால் ஒருவிடயம் மட்டும் உண்மை விடுதலைப் புலிகளை பொறுத்தவரை அவர்களுக்கு தடை நீக்கம் முக்கியமானது.

இவ்விடயத்தில் எந்த தரப்புக்கும் நோர்வே அழுத்தம் கொடுக்காது இவ் விடயத்தில் சம்மந்தப் பட்ட எந்த வொருதரப்பாவது இதுபற்றி கருத்துக்கேட்டால் அந்தத் தரப்பிடம்நேரடியாக ஆலோசனை வழங்கப் படும் என்றார். (இ)

## தமிழக சட்டசபை தேர்தல் கட்சிகளின் வெற்றி நிலை

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் முடிவுகள் ஒரே பார்வையில்.

| | | |
|---|---|---|
| அ. இ. அ. தி. மு. க. கூட்டணி | - | 196 |
| ★ அ.இ.அ.தி.மு.க (ஜெயலலிதா) | - | 132 |
| ★ தமிழ் மாநிலக் காங்கிரஸ் (ஜி. கே. மூப்பனார்) | - | 21 |
| ★ காங்கிரஸ் (சோனியாகாந்தி) | - | 07 |
| ★ பா. ம.க (டாக்டர். ராமதாஸ்) | - | 26 |
| ★ இ. கம்யூனிஸ்ட் கட்சி | - | 05 |
| ★ மார்க்ஸிஸக் கட்சி | - | 06 |
| ★ இந்திய தேசிய லீக் | - | 01 |
| ★ பார்வாட்புளக் | - | 01 |
| ★ இந்தியக் குடியரசுக் கட்சி | - | 01 |
| ★ அ. இ. அ. தி. மு. க (சுயேட்சை) | - | 01 |
| தி. மு. க தலைமையிலான கூட்டணி | - | 37 |
| ★ தி. மு. க | - | 28 |
| ★ பா. ஜ. கட்சி | - | 04 |
| ★ த. மா. க (ப. சிதம்பரம்) | - | 02 |
| ★ எம். ஜி. ஆர். அ. இ. தி. மு.க | - | 02 |
| ★ விடுதலைச் சிறுத்தை | - | 01 |

### இ. தொ ..

கட்சியின சிரேஷ்ட தலைவர்களில் ஒருவருமான ஆர். யோகராஜன் தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியில அங்கம்வகிக்கும் கட்சிகளுள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி முக்கிய பங்கைவகிக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இக்கட்சியுடன் மலையக மக்கள்முன்னணித்தலைவரும் எம். பி.யுமான பெ. சந்திரசேகரன் மற்றும் இ. தொ. க,வின் முன்னாள் செயலாளர் ஆகியோர் தற்போது மலையக மக்கள் பிரச்சினைகளை ஒன்றிணைத்து அரசுக்கு ஆதரவு வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (ம

### கலைஞர் ...

இதேவேளை புதிதாக தெரிவுசெய்யப்பட்ட அ.தி.மு.க சட்ட மன்ற உறுப் பினர்கள் இன்று கூடிதமது சட்ட மன்ற தலைவரை தெரிவுசெய்யவுள்ளனர் இதனையடுத்து சட்டப்படி முதலமைச்சராக தம்மை நியமிக்கு மாறு தமிழக ஆளுநரை செல்வி ஜெயலலிதா கோரவுள்ளார். (வ)

### அ. இ. அ ...

எந்தக கட்சியும் தனித்து ஆட்சிஅமைக்க முடியும்.

அ. இ. அ. தி. மு க கூட்டணி 196 தொகுதிகளையும் தி. மு. க கூட்டணி 37 தொகுதிகளையும், சுயேட்சைகள் 2தொகுதிகளையும் கைப்பற்றியுள்ளன.

செல்விஜெயலலிதாமீதான வழக்குகள் ஏதுவாகஇருந்தாலும் மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளித்து முதல்வர் பொறுப்பை ஜெயலலிதா ஏற்க வேண்டுமென கூட்டணிக்கட்சித்தலைவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (வ)

### மூன்று ..

காரிகளும் ஜனாதிபதியிடம் ஏற்கனவே வலியுறுத்திகூறியிருந்தனர்.

இதேவேளை நோர்வேவின் விசேடதூதுவர் எரிக்சோல்ஹெய்ம் இவ்வாரத்தில் ஜனாதிபதி சந்திரிகாவை சந்திப்பதற்காக கொழும்பு வரவுள்ளார்என நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசுஅறிவிக்கவுள்ள யுத்த நிறுத்த அறிவிப்பு எரிக்சோல்ஹெய்ம்மூலம் விடுதலைப் புலிகளுக்கு அறிவிப்பதற்கு அரசுதிட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## யாழ் சிறைச்சாலையில் பெரும் இடநெருக்கடி

(யாழ்ப்பாணம்

இந்தியமீனவர்கள் 39பேரை யாழ்சிறைச்சாலையில்தடுத்து வைத்திருப்பதால் சிறைச்சாலையில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகசிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

இவ்விடநெருக்கடி காரணமாக சிறைக் கைதிகளிடையே தொற்றுநோய் ஏற்படும் ஆபத்தும் உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது- (ந

## விளக்கமறியல் கைதி சுருக்கிட்டுத் தற்கொலை

### மன்னாரில் சம்பவம்

(மன்னார்)

மன்னார் வங்காலைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த, விளக்கமறியல் கைதி யொருவர், கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம்கடந்தவியாழக்கிழமை சிறைச்சாலை மலசலகூடத்தில் இடம்பெற்றது: சம்பவத்தில் தர்மதாச(வயது45) என்பவரே மரணமானவராவார்:

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: பிரஸ்தாபநபர் கடந்த வருடம் டிசம்பர் மாதம் ஒரே குடும்பத்தை... சேர்ந்த தந்தை, தாய், ம... ஆகியோரைக் கொலைசெய்த குற்றத்திற்காக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தார்; சம்பவ தினத்தன்று மலசலகூடம் செல்வதாக்க் கூறி அங்கு தற்கொலை செய்துள்ளார். (இ)

## பொருட்கள் சேவைகள் வரியும் எரிபொருள் விலையும் உயரும்

(கொழும்பு)

பொருட்கள் சேவைகள் வரியும், எரிபொருள் விலையும் மீண்டும் அதிகரிக்கப்படவுள்ளன. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து மேலும் உதவிகளைப்பெறும்நோக்கில் இவ்வாண்டின் இறுதியில் இவை அதிகரிக்கப்படவுள்ளன.

தேசியப்பாதுகாப்பு வரியில் கணிசமான அளவு குறைப்பை ஏற்படுத்தியபின் பொ. சே. வரி அதிகரிக்கப்படும் என சர்வதேச நாணய நிதியத்திற்கு நிதியமைச்சு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது: இப்பொழு... தேசியப் பாதுகாப்பு வரி 7... சதவீதமாகவும், ஜி.எஸ்.ரி 12.5 சதவீதமாகவும் உ...ளது.

எப்போதிருந்து இவை அதிகரிக்கப்படும் என்பது செப்ரெம்பரில் தீர்மானிக்கப்படு... அத்துடன், அரசஊழியரின் சம்பளங்கள் இவ்வாண்டி... அதிகரிக்கப்படமாட்டாதென வும் அரசு அறிவித்துள்ள... 2004ஆம் ஆண்டில் ஜி.எஸ்.ரியும், பாதுகாப்பு வரியும் தனித்தனியாக இராமல் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுவிடும் என கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

### யாழ்: நீதவான்..

இவர்கள் 22 பேரையும் இம்மாதம் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்:

ஆஜர் செய்யப்பட்ட 22இந்திய மீனவர்களின் பெயர் விபரம்வருமாறு:

கே. மனோகரன், என். சேகர், ஆர். தங்கவேலு கே. சாளிராஜ், என். சரவணன், ஏ. முருகன் எம். ஐயப்பன், எம். ஹென்சன், ஆர். ஆரோக்கியசாமி, எஸ். யோசவ், எம். உமையான், கே. கந்தன், எஸ். தர்ஷன், ஏ. ரவிசங்கர். ஆர். முனிசாமி எம். கணேசன், ஜே. வெள்ளைச்சாமி, எம். ராஜேந்திரன், ஏ. பொம்மை, பி. கார்மேகம், பி. ஜெனஸ்,

நாகம்ஸ்
(சுன்னாகம்)
அர்ஜுன், ஜோதிகா,
மீனா, மணிவண்ணன்
நடித்த
ரிதம்
(சினிமாஸ்லிமிற்ரெட்)
வெளியீடு
11-00, 2-30 பு. நே.
சனி ஞாயிறு பி. ப 6 மணி
(ரீலீஸ்) (கி-1977)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ நிறுவனத்தாரால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அ... களது அச்சகத்தில் 2001 ஆண்டு மே மாதம் 14ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.